
# வானவில்

**VAANAVIL**

இதழ் 171 பங்குனி 2025

ISSUE 171 March 2025


# இனப் பிரச்சினைக்கு அரசாங்கத்தின் தீர்வு என்ன?




இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதும், அது நாட்பட்ட ஆறாத புண்ணாக இருந்து வருவதும் இரகசியமானதல்ல.

இந்த இனப்பிரச்சினை 1948இல் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர்தான் உருவானது என்று கருதுவோர் பலர். அதாவது, பிரித்தானியர் 1948இல் சிங்களப் பெரும்பான்மை இனத்தின் தலைவர்களிடம் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்துவிட்டுப் போன பின்னர், அந்தச் சிங்களத் தலைவர்களால்தான் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரசைகள் ஆக்கப்பட்டார்கள் என்ற கருத்து பலரிடமும் வலுவாக வேரூன்றி உள்ளது.

ஆனால் பொதுவாகத் தமிழ் மக்களின் கருத்துக்கள் இவ்வாறு பொத்தாம் பொதுவாக இருந்தாலும், தமிழ்மக்களுக்குத் தலைமை தாங்கிய தமிழ் காங்கிரஸ் – தமிழரசு கட்சிகள் தமது வர்க்க நலன்கள் கருதி, உயர் வர்க்க சிங்களத் தலைவர்களுடன் (குறிப்பாக அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியுடன்) எப்பொழுதுமே கூடிக்குலாவி வந்துள்ள வரலாறும் இருக்கின்றது.

மறுபக்கத்தில், தமிழ்த் தலைமைகள் காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் சார்பாக சில கோரிக்கைகளையும் முன் வைத்து வந்துள்ளன. ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழர்களின் மூத்த அரசியல் கட்சியான தமிழ் காங்கிரஸ், சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களுக்கும் சம அந்தஸ்து வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தது.

பின்னர், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி தமிழர்களுக்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தது.

இந்த இரண்டு கட்சிகளினதும் கோரிக்கைகள் சமாதான வழிமுறையில் ஏற்கப்படாத அல்லது போராட்டத்தின் மூலமாக வென்றெடுக்க முடியாத ஒரு சூழலில், இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி 1976 இல் தமிழ் மக்களுக்கு தனிநாடுதான் (தமிழீழம்) ஒரேயொரு தீர்வு என்ற கருத்தை முன் வைத்தது.

அந்தக் கொள்கையை முன் வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி, அதற்காக நடைமுறையில் செயல்படாமல் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அதைப் பயன்படுத்தியதுடன் நின்று விட, அந்த இலட்சியத்தை அடையும் நோக்கத்துடன் தமிழ் இளைஞர்களின் பல இயக்கங்கள் தோற்றம் பெற்று, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தன.

ஆனால், இந்த இயக்கங்களின் மத்தியில் பிரதேசவாதம், சாதிப் பாகுபாடு, வர்க்க முரண்பாடு, அரசியல் நோக்கு என்பன காரணமாக ஏற்பட்ட அதிகாரப் போட்டி மோதல்களுக்கு இட்டுச் சென்ற சூழ்நிலையில், தமிழ் பிற்போக்கு சக்திகளை பாசிச வடிவத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி நின்ற புலிகள் இயக்கம், மற்றைய இயக்கங்கள் எல்லாவற்றையும் அழித்து, தன்னை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக்கிக் கொண்டது. ஆனால் அந்த இயக்கம் பின்பற்றிய ஏகாதிபத்திய சார்பு மற்றும் மக்கள் விரோத பிற்போக்கு கொள்கைகள் காரணமாகவும், சுத்த இராணுவக் கண்ணோட்ட அணுகுமுறைகள் காரணமாகவும், 2009இல் அரசாங்கத்தால் அழித்தொழிக்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய பிற்போக்கான தமிழ் சக்தியான புலிகள் அழிக்கப்பட்டாலும், ஆயுதம் தாங்காத தமிழ் பிற்போக்கு சக்திகள் அரசியல் அரங்கில் நீடித்து வருகின்றன. வர்க்கத்தின் இருப்பு என்பது இதைத்தான்.

மறுபக்கத்தில், தமிழ் மக்களின் தேசிய உரிமைகளுக்கான கோரிக்கைகளை பேரினவாத அடிப்படையில் சிங்கள


தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...


**நூறு சிந்தனை மலரட்டும்**

# சிரியாவின் வீழ்ச்சியும் மத்திய கிழக்கு நெருக்கடியும்

சிரியாவில், மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடைய சுன்னி முஸ்லீம் பிரிவின் அபு முகமது அல்–ஜூலானி (Abu Mohammad al-Jolani) தலைமையிலான ஹையத் தஹ்ரிர் அல்–ஷாம் (Hayat Tahrir al-Sham - HTS) ஆட்சியானது, அலவைற்றுகள் (Alawites) மீதான படுகொலைகளை தீவிரப்படுத்தியுள்ளதால், பல ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும் அகதிளாக்கப்பட்டும் உள்ளனர்.

சிரியாவில் ஷியா–அலவைற்–கிறிஸ்தவ பிரிவினரின் ஆதரவிலான பஷர் அல் அசாத் (Bashar al-Assad) தலைமையிலான அரசு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் HTS படைகளால் கவிழ்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அசாத் ரஷ்யாவுக்கு சென்றார். சிரியாவின் ஆட்சியைக் கைப்பற்றிய அபு முகமது அல்–ஜூலானி அதிபராக பதவியேற்று ஆட்சியை நடத்தி வருகிறார்.

24 ஆண்டுகளாக சிரியா, பஷர் அல்–அசாத்தின் ஆட்சியின் கீழிருந்தது. அதற்கு முன்னர் அவரது தந்தை ஹஃபீஸ் அல்–அசாத் (Hafez al-Assad) தலைமையில் ஆட்சி இருந்தது. இவர்களின் தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு அரபு சோசலிச பாத் கட்சியானது (Arab Socialist Ba'ath Party) சிரியாவை 54 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி புரிந்தது.

பஷர் அல் ஆசாத் பதவி ஏற்று 11 ஆண்டுகளின் பின்னர் 2011 இல் தொடங்கிய உள்நாட்டு போர் 2017 இல் முடிவடைந்ததாகக் கருதப்பட்டது. அந்த காலகட்டத்தில் ரஷ்யா, ஈரான் மற்றும் ஈரான் சார்பான ஆயுதக் குழுக்கள் உடன் சேர்ந்து முக்கிய நகரங்களின் கட்டுப்பாட்டை சிரிய அரச படைகள் கைப்பற்றிய நிலையில் உள்நாட்டு போர் முடிவடைந்ததாக அசாத் தனது ஆட்சியை தொடர்ந்தார். எனினும் நாட்டின் ஒரு பகுதியை துருக்கி மற்றும் அமெரிக்க ஆதரவுக் குழுக்கள் தங்கள் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தனர். இந்த உள்நாட்டு யுத்தத்தில் 5 இலட்சத்துக்கும் அதிகமான சிரிய மக்கள் உயிரிழந்துள்ளனர். 10 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

94% சதவீத இஸ்லாம் மதத்தைக் கொண்ட சிரிய சனத்தொகையில் பெரும்பான்மையினர் அரபு மொழி பேசுபவர்களாகவும், குர்திஷ் மொழி பேசுபவர்கள் சிறுபான்மையினராகவும் இருக்கிறார்கள். இந்த இரு மொழிகள் பேசுபவர்களில் 79% சுன்னி மதப்பிரிவினைச் சேர்ந்தவர்கள். சுன்னிப்பிரிவினரை அடுத்து ஷியா மற்றும் அலவைற் மதப்பிரிவினர் 14% ஆகவும், கிறிஸ்தவர்கள் 4% ஆகவும் இருக்கிறார்கள்.

உலகில் முதன்முதலில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிறந்த இடமாக சிரியா கருதப்படுகின்றது. மனித நாகரீகத்திலும் மத நூல்களிலும் முக்கிய இடத்தை பிடித்துள்ள இந்த பகுதி முதலாம் உலகப் போருக்கு பின்னர் பிரான்சின் கைவசம் சென்றது. 1946 ஆம் ஆண்டு பிரான்சில் இருந்து விடுதலை பெற்றாலும், சிரியாவை கைப்பற்ற பல நாடுகள் துடித்தன. பல்வேறு விதமான மதப்பிரிவினரும் சிறுபான்மையினரும் இருப்பதால் கடந்த 80 ஆண்டுகளாகவே சிரியாவில் அமைதி என்கின்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருக்கின்றது.

சிரியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போதைய சிரிய அதிபர், அபு முகமது அல்–ஜூலானி அல் கைடா (Al Qaida) அமைப்பில் இணைந்து அமெரிக்க படைகளுக்கு எதிராக ஈராக்கில் போரிட்டார். அப்போது 2006 இல் அமெரிக்கப் படைகளால் ஈராக்கில் சிறைப்பிடிக்கப்பட்டு 2011 இல் விடுவிக்கப்பட்டார்.

சிரியாவின் உள்நாட்டுப் போர் தொடங்கியபோது அபு முகமது அல்–ஜூலானி தலைமையில் 2012 இல், அல் கைடா அமைப்பின் ஆதரவுடன் அல் நுஸ்ரா முன்னணி (Al-Nusra Front) என்ற பெயரில் பயங்கரவாத இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டு, சிரிய அரச படைகளுக்கு எதிராக தாக்குதலைத் தொடங்கியது. இந்தக் குழுவின் நோக்கம் அசாத் ஆட்சியை விட்டு அகற்றி, ஐ.எஸ்.ஐ.எஸ் (Islamic State of Iraq and Syria) ஆட்சியை நிறுவ வேண்டும் என்பதுதான்.

பின்னர் 2016 ஆம் ஆண்டில், இந்த அல் நுஸ்ரா முன்னணி தன்னுடைய பயங்கரவாத அடையாளங்களை அகற்றும் நோக்குடன் அல் கைடா அமைப்பினுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு, ஏனைய சில அமைப்புகளுடன் சேர்ந்து HTS என்ற அமைப்பை நிறுவியது. இந்த அமைப்பை நிறுவுவதில் துருக்கி, மேற்குலக நாடுகள் மற்றும் இஸ்ரேல் பின்னணியிலிருந்ததாகக் கூறப்படுகின்றது.

சிரியா உள்நாட்டு போரில் அமெரிக்காவின் பங்களிப்பு என்பது பலமுறை மாறியிருக்கிறது. ஒபாமா ஆட்சிகாலத்தில் சிரிய அரசுக்கு எதிரான பயங்கரவாதக் குழுக்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்ததுடன் ஆயுதப் பயிற்சியையும் வழங்கியது. ஆனால் 2014 ஆம் ஆண்டு இந்தக் குழுக்கள் பல இணைந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பைத் தோற்றுவித்தபோது, அமெரிக்கப் படைகள் வான்வழி தாக்குதல்கள் மற்றும் குர்திஷ் படைகளுக்கு உதவி செய்வது போன்ற செயல்பாடுகள் மூலம் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை எதிர்த்து சண்டையிட்டது. தற்போது மேற்கு ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல், துருக்கி மற்றும் சில அரபு நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா முன்னாள் அல் கைடா பயங்கரவாதியை சிரியாவின் அதிபராக பதவியமர்த்தியுள்ளது.

துருக்கி, இஸ்ரேல், ஜோர்டான், லெபனான், ஈராக் ஆகிய நாடுகள் சிரியாவின் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்த நாடுகளில் ஓட்டோமான் பேரரசு கனவுடன் துருக்கியும், சியோனிச இஸ்ரேலும் முடியாட்சி ஜோர்டானும் மேற்குலக ஆதிக்கத்தின் கீழாகவே எப்போதும் இயங்குவார்கள். இன்று வரை ஈரானின் தடுப்பு சுவராக இருந்துவந்த சிரியா, ஈராக், லெபனான் மற்றும் பலஸ்தீன மக்களின் மேற்குலகிற்கு எதிரான குரல்கள் நசுக்கப்பட்டுள்ளன. இப்போது மேற்குலகின் ஜென்மவிரோதியாக ஈரான் மாத்திரமே எஞ்சியுள்ளது. ஈரான் அணு ஆயுதத்தை தயாரிக்கலாம் என்ற பெயரில் மத்திய கிழக்கில் இன்னுமொரு யுத்த நெருக்கடியை உருவாக்க அமெரிக்காவும் இஸ்ரேலும் எத்தணித்து வருகின்றன.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com
'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# ட்ரம்ப்பால் ஏற்பட்ட தலைகீழ் மாற்றங்கள்!




**க**டந்த பெப்ரவரி மாதத்தின் இறுதி வாரம் உலகம் கற்பனை செய்து பார்த்திராத இரு சம்பவங்களைக் கண்டது. ஒன்று, ரஷ்யாவுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐக்கிய நாடுகள் தீர்மானத்தை அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து எதிர்த்தது. இரண்டாவது, உலக ஊடகங்களின் முன்னால் உக்ரைன் அதிபரும் அமெரிக்க அதிபரும் போரையும் அமைதியையும் மையப்படுத்தி கடுமையான வார்த்தைப் போரில் ஈடுபட்டது.

உக்ரைன் போரை தலைமையேற்று நடத்திய அமெரிக்கா தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்ததும் அதன் பின்னால் ஆமாம் சாமி போட்டுக் கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியம் ஐ.நாவில் ரஷ்ய எதிர்ப்பு தீர்மானம் கொண்டு வருவதும் யாரும் எண்ணிப் பார்த்திராத ஒன்று. அதுமட்டுமல்ல, வார்த்தைப் போரில் ஈடுபட்ட ஷெலன்ஸ்கியை ஆதரித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அறிக்கை விட்டதோடு போரினைத் தொடர அனைத்து உதவிகளையும் வழங்கி தலைமை ஏற்க முன்வந்துள்ளன.

போரை முன்னின்று நடத்திய நாடு, போரிட்ட நாட்டுடன் சேர்ந்து அமைதியை ஏற்படுத்தப் போகிறேன் என்கிறது. போரினால் நாட்டையும் மக்களையும் இழந்து நிற்கும் உக்ரைனும், போரினால் விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதாரச் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளும் போரைத் தொடர வேண்டும் என்கின்றன.

**பாஸ்கர் செல்வராஜ்**

விலை அதிகம் கொண்ட அமெரிக்கர்களின் எரிபொருளை வாங்கிக் கொண்டிருக்கும் இந்நாடுகள் போரை முடிவுக்குக் கொண்டுவர முனைவார்கள், பைடன் ஆட்சிக் காலத்தில் உடைக்கப்பட்ட நோர்ட் எரிவாயுக் குழாய் 2 (Nord Stream 2) திட்டத்தை செயல்பாட்டுக்குக் கொண்டுவர எத்தனிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதலாவது ஆட்சிக் காலத்தில் அத்திட்டத்தின் மீது பொருளாதாரத் தடை விதித்த ட்ரம்ப்பின் கோடீஸ்வர நண்பர்கள், அந்தக் குழாயை முதலீட்டுச் சரிசெய்து இயக்க பேச்சுவார்த்தை நடப்பதாகச் செய்திகள் கசிகின்றன.

ட்ரம்ப் பதவியேற்ற சில மாதங்களில் நடக்கும் இந்தத் தலைகீழ் மாற்றங்கள் உலகில் என்ன நடக்கிறது என்று புரியாமல் எல்லோரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

**அமெரிக்கர்களால் எழுதப்பட்டது உலக விதி இல்லை!**

இது குறித்த ஊடக இரைச்சலைத் தாண்டி இம்மாற்றங்களைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் தற்போதைய அமெரிக்க அரசின் செயலர் மார்கோ ருபியோ (Marco Rubio), ஃபாக்ஸ் செய்தி (Fox News) நேர்காணலில் “ஒற்றைத் துருவ உலகம் (Unipolar World) இயல்பானது அல்ல. அது பிறழ்வு (anomaly). பனிப்போரின் விளைவு. நாம் மீண்டும் பல வலுவான நாடுகள் உலகின் பல பகுதிகளில் இருக்கும் பல்துருவ உலகத்தை (Multipolar World) அடையும் புள்ளியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்” என்று சொன்ன வாக்கியங்களை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும்

இது முந்தைய அமெரிக்க செயலர் பிளிங்கன் (Blinken) திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்த “உலக விதிகளின் அடிப்படையிலான ஒழுங்கு” (Rules based order) என்ற நிலைப்பாட்டில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. எப்படி இந்த ருபியோவின் பல்துருவ கருத்தாடல் வேறுபட்டது என்பதைப் புரிந்து கொள்வதற்கு பிளிங்கன் கூறிய உலக ஒழுங்கின் விதி என்ன என்று தெரிய வேண்டும்.

கெடுவாய்ப்பாக ஐ.நாவின் உலக நாடுகளுக்கான விதி தெரியும். இவர்கள் கூறும் உலக விதி எங்கே இருக்கிறது? யாரால் உருவாக்கப்பட்டது? என்று நீண்ட அனுபவம் கொண்ட ரஷ்ய வெளியுறவு அமைச்சரே கேட்கும் நிலை. ஏனெனில், அப்படி அமெரிக்கர்களால் எழுதப்பட்ட உலக விதி என்ற ஒன்று இல்லை. ஆனால், செயல்படுத்திய விதி ஒன்று இருந்தது.

அந்த விதி உலக நாடுகள் டொலரைத் தவிர மற்ற நாணயங்களில் பரிவர்த்தனை செய்வதற்கு தடை செய்தது. அது எப்படி செயல்படுத்தப்பட்டது என்று கேட்டால், அது ஐம்பதுகளில் தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட டொலரை மையப்படுத்திய பரிவர்த்தனையில் தொடங்கி, பின்பு எழுபதுகளில் உலக எண்ணெயின் விலையும் பரிவர்த்தனையும் டொலரில்தான் என்பதாக மாறி, வங்கிகளின் வழியான எல்லா உலக கொடுக்கல் வாங்கல்களும்

ஸ்வி∴ப்ட் (swift) எனப்படும் கட்டமைப்பின் வழியாக மட்டுமே நடப்பது என்பதாக வளர்ந்து நிலைபெற்றது.

அதில் விடுபட்ட சோவியத் ஒன்றிய நாடுகளும் உலகமயத்துக்குப் பிறகு அதில் இறுக்கமாகச் சேர்த்துக் கட்டப்பட்டன. அத்தனை நாடுகளின் வங்கிகளின் பணப்பரிமாற்ற செய்திகளையும் திறம்பட கையாளும் ஸ்வி∴ப்ட் கட்டமைப்பும், அதற்குத் தேவையான இணையம், மீத்திறன் வாய்ந்த கணினிகள் (Super computers) அதற்கான சில்லுகளை (chips) உருவாக்கும் நுட்பம் எல்லாம் அமெரிக்கர்களிடம் மட்டுமே இருந்தது.

எனவே, மாற்று வழியில் சிறிய அளவிலான பரிவர்த்தனைகள் தவிர, இந்த வலைப்பின்னலைத் தாண்டி யாரும் பணப்பரிவர்த்தனை செய்துகொள்ள முடியாது. இதனால், எரிபொருளின் விலை அமெரிக்க டொலரிலும் அதற்கான டொலரைக் கொடுத்து வாங்க அவர்களின் இணைய கணினி நுட்பங்களில் செயல்படும் கட்டமைப்பிலும், அதுவும் அமெரிக்க வங்கிகள் வழியாகவும் மட்டுமே நடைபெற வேண்டும் என்பது விதியாக மாறியது. இதுவே பிளிங்கன் சொல்லும் உலக ஒழுங்கு விதி எனவும் கொள்வோம்

**அமெரிக்கர்களின் சதுரங்க ஆட்டம்!**

அப்படி உருவான ஒழுங்கு விதிக்கு இப்போது என்னவானது என்று பார்த்தால் ரஷ்யா தனது எரிபொருளை சீனாவுக்கு குழாய் அமைத்து சொந்த நாணயத்தில் பரிவர்த்தனை செய்து கொள்ள ஆரம்பித்தது. அது எப்படி சாத்தியமானது என்று கேட்டால், சீனா இணைய நுட்பங்களில் அமெரிக்காவுக்கு இணையாக வளர்ந்து இந்த இரு நாடுகளும் யாரும் உள்ளே நுழைய முடியாத இணைய அரணை (Firewall) ஏற்படுத்திக் கொண்டதோடு பணப்பரிவர்த்தனைக்கான இணையக் கட்டமைப்புகளையும் (CHIPS, System for Transfer of Financial Messages - SPFS) ஏற்படுத்திக் கொள்ளும் அளவுக்கு தொழில்நுட்ப வளர்ச்சி அடைந்ததுதான் காரணம்.

இதன் வழியாக “அமெரிக்க டொலரில் எண்ணெய் விலை அவர்களின் இணைய வங்கிக் கட்டமைப்பின் வழியாக மட்டுமே வணிகம்” என்ற ஒழுங்கு விதியை உடைத்திருக்கிறார்கள் அல்லது மீறி இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வரலாம். அதனால்தான் சீன, ரஷ்ய நாடுகளை எதிர்த்து சண்டையிடுவதும், விதியை மதித்து நடக்க நெருக்கடி கொடுப்பதும், மாற்று நாணயத்தில் வணிகம் செய்தால் வரி விதிப்பேன் என்று மிரட்டுவதுமாக அமெரிக்கர்கள் இருந்திருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு சீனர்கள் மாற்று சூரிய, காற்று மின்னாற்றல் மற்றும் சேமிக்கும் மின்கல நுட்பங்களில் தேர்ந்து உற்பத்தியைப் பெருக்கியதோடு, மாற்று மின்சார மகிழுந்துகளை மலிவாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறார்கள். இதனால் பழைய எரிபொருளின் தேவையைக் குறைத்து அதனால் இயங்கும் மகிழுந்துகளின் சந்தையையும் இல்லாமலாக்கி வருகிறார்கள்.

இப்படி மாற்று நாணய எரிபொருள் வணிகம், மாற்று எரிபொருள் இணைய மின் மகிழுந்துகள் உருவாக்கத்தின் மூலம் உலகமய கோட்டையையும் அதற்கான ஒழுங்கு விதியையும் ரஷ்யாவும் சீனாவும் உடைத்து வந்திருக்கின்றன. அப்படி உடைக்கும் ரஷ்யாவின் ஐரோப்பிய சந்தை மற்றும் எரிபொருள் வளத்தைக் கைப்பற்றவும் சீனாவின் மாற்று எரிபொருள் இணைய நுட்பத்தை முடக்கவும் அமெரிக்கர்கள் முயற்சி செய்து இருக்கிறார்கள்.

அப்படிச் செய்த மறைமுக சிரிய, உக்ரைன் பதிலிப் போர்கள், சீனாவுடனான வர்த்தகப்போர், ஹொங்காங் உள்நாட்டுக் குழப்பம், தாய்வான் விடுதலை மிரட்டல், சில்லுகள் ஏற்றுமதி மற்றும் உற்பத்திக் கருவிகளுக்குத் தடை என அமெரிக்கர்கள் செய்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்திருக்கின்றன.

உக்ரைன் போரில் ரஷ்யாவின் வெற்றியும், சில்லுகளுக்கு விதித்த தடையை உடைத்து ஏழு நானோமீட்டர் சில்லுகளைச் சொந்தமாக உருவாக்கி இணையப் பொருள்களுக்கான சந்தையைச் சீனா தக்கவைத்ததும் இதுவரையிலுமான அமெரிக்கர்களின் சதுரங்க ஆட்டத்தை முடித்து வைத்திருக்கிறது.

அந்த இழப்பை ஏற்றுக்கொண்டு இருப்பதைக் காப்பாற்றிக் கொள்வது அல்லது இன்னும் மூர்க்கமாக மோதி போரை விரிவாக்குவது என்ற இரண்டு தெரிவுகளை மட்டுமே அமெரிக்கர்களின் முன் நிறுத்தி இருக்கிறது.

எண்ணெய் மற்றும் தொழிற்துறை முதலாளிகள் நிறைந்த ட்ரம்பின் குடியரசுக் கட்சி இராணுவ வலிமை கொண்ட சீன, ரஷ்யர்களுடன் மோதி வெற்றிபெற முடியாது என்பதை உணர்ந்து முதலாவது தெரிவை ஏற்று இருக்கிறது. வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த ட்ரம்ப் நிர்வாகத்தின் செயலர் மார்கோ ருபியோ பல்துருவ உலகத்தை அடைந்து கொண்டிருக்கிறோம் என்று அறிவித்து தோல்வியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அந்த முடிவின் வெளிப்பாடாக ட்ரம்ப் போரினை நிறுத்தி ரஷ்யாவுடன் சமாதானம் பேசுகிறார். போரில் இழந்த பணத்தை ஈடுசெய்ய உக்ரைனின் கனிம வளத்தைக் கொடு என்று கழுத்தை நெரிக்கிறார். பதிலுக்கு எதுவும் தரப்படவில்லை என்பதால் ஷெலன்ஸ்கி முரண்டு பிடித்திருக்கிறார்.

**ஒரே துருவமாக இருக்கும் அமெரிக்கா... இனி?**

இதன்படி முந்தைய டொலர் உலக ஒழுங்கு உடைந்துவிட்டதை அமெரிக்கா ஏற்று முன்னோக்கி நகர முனைந்து இருக்கிறது. வலுவான சீன, ரஷ்ய நாடுகளின் டொலர் அல்லாத பரிவர்த்தனைகளை அமெரிக்கா ஏற்க தயாராகி விட்டது. அப்படியான உலகமே வரப்போகும் பல்துருவ உலகம் என்று பொருளாகிறது.

அப்படியான மாற்று பரிவர்த்தனைக்கு வெறும் இணையக் கட்டமைப்பு மட்டும் போதாது. மற்றவர்களை ஏற்க செய்ய வலுவான உற்பத்தி வலிமையும் மற்ற நாடுகள் ஏற்க வேண்டிய தேவையும் இருக்க வேண்டும்.

உலக நாடுகளுக்குத் தேவையான எரிபொருள், கனிமங்கள், உணவுப்பொருள்கள், ஆயுதங்கள் என பெரும் உற்பத்தி வலிமை கொண்ட ரஷ்யாவும் மாற்று எரிபொருள், மின்கலம், இணையம், செயற்கை நுண்ணறிவு என நவீன நுட்பங்கள் அனைத்தும் பெற்ற சீனாவும் அவர்களின் நாணயத்தில் பரிவர்த்தனை செய்யும் வாய்ப்பைப் பெற்று உலகின் முக்கிய துருவங்களாகின்றன.

ஒருதுருவமாக இருக்கும் அமெரிக்கா இவ்விரு நாடுகள் வைத்திருக்கும் அத்தனை நுட்பங்களையும் வளங்களையும் பெற்று இருப்பதால் உருவாகிக் கொண்டிருக்கும் பல்துருவ உலகின் முக்கிய துருவமாகத் தொடரும் வாய்ப்பைப் பெறுகிறது.

இதன்படி உருவாகும் பல்துருவ உலகம் மூலப்பொருள்கள், கனிமங்கள்

மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப வலிமை வாய்ந்த நாடுகள் மற்ற நாடுகளுடன் அவரவர் வலிமைக்கு ஏற்ப அவரவர் நாணயத்தில் பணப்பரிவர்த்தனை செய்துகொள்வது என்பதாக இருக்கும் என்பதைக் காட்டுகிறது.

**அமெரிக்காவின் மகுடிக்கு ஆடும் பாம்புகள்!**

சீன, ரஷ்ய நாடுகளைப் பொறுத்தவரையில் இது ஏற்கனவே கட்டி எழுப்பப்பட்ட நடைமுறை யதார்த்தம். ஆனால், அமெரிக்கா இனிதான் கட்டி எழுப்ப வேண்டும். அப்படிக் கட்டியெழுப்ப பழைய டொலர் எரிபொருள் மைய உலகமயக் கட்டமைப்பை உடைக்க வேண்டியது முன்நிபந்தனை.

உலகமய எரிபொருள் டொலர் இணைய வங்கிக் கட்டமைப்பின் மூலம் கொழுத்த அமெரிக்க வங்கி மூலதனம், உலகம் முழுக்க பாய்ந்து மலிவாக உற்பத்தி செய்து கொண்டுவந்து அமெரிக்காவில் விற்று சொந்த நாட்டின் உற்பத்தியாளர்களை சந்தையில் இருந்து வெளியேற்றி பணத்தின் மதிப்பைத் திரித்து பொருள்களின் விலையைக் கூட்டி தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி வாங்க வழியற்றவர்களாக மாற்றி இருக்கிறது.

எதிர்காலத்தில் சம்பாதிக்கப் போகும் வருவாயை இப்போதே கடனாகக் கொடுத்து செலவழிக்க வைத்து எல்லோரையும் கடன்காரர்களாக்கி இருக்கிறது. அமெரிக்க அரசு வருவாய் பற்றாக்குறைக்கு வெளியிட்ட டொலர் கடன் பத்திரங்களின் அளவு 36 ட்ரில்லியனை எட்டிவிட்டது. வெளிநாட்டவர் இதில் முதலிடுவதை நிறுத்திவிட்டார்கள்.

போட்ட பணம் திரும்ப வரும் என்ற நம்பிக்கை பொய்த்து எல்லோரும் தங்கத்துக்கு மாறி வருகிறார்கள். பற்றாக்குறையைக் குறைக்கவில்லை என்றால் இன்னும் மூன்றாண்டுகளில் அமெரிக்கா நெஞ்சுவலி வந்து துடிப்பது தவிர்க்கவியலாதது என்கிறார் பணப்பொதி நிறுவனர் (Hedge fund) டாலியோ.

சுருக்கமாக எதிர்கால வருவாயை நம்பி கடன் வாங்கிய அரசும் மக்களும் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையை எட்டி இந்தக் கட்டமைப்பு இனியும் தொடர முடியாத நிலையை எட்டிவிட்டது.

இதற்கான தீர்வு, கடன்காரர்களான வங்கி முதலாளிகளுக்கு மஞ்சள் நோட்டீஸ் கொடுப்பதுதான். அதற்கான ஏற்பாடாக மின்னனு நாணய பரிவர்த்தனைக்கு ட்ரம்ப் நிர்வாகம் தயாராகி வருவதைப் போல் தெரிகிறது. மின்னணு நாணய கையிருப்பு குறித்த செய்திகள், வரி விதித்து இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியைக் கூட்டும் வேலைகள் அதற்கான தொடக்கமாக இருக்கலாம்.

அமெரிக்கத் தொழிற்துறை இதனால் பலனடைந்து வரவேற்றாலும் பாதிக்கப்பட போகும் வங்கி மூலதனம் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து கொண்டு எதிர்த்து நிற்கிறது. முன்பு வண்டிகளைப் பெருமளவு உற்பத்தி செய்து பழைய எண்ணெய் சார்ந்த உலகமய விரிவாக்கத்தில் பலனடைந்தது ஐரோப்பா.

தற்போது எந்த இயற்கை வளமோ, புதிய மாற்று எரிபொருள் இணைய மின் மகிழுந்து உற்பத்தி நுட்பமோ இன்றி வங்கி மூலதனத்துடன் ஒத்துழைத்துத் தோற்றுப்போன உக்ரைன் போரைத் தொடர வேண்டும் என்கிறது. அது இறப்பு உறுதியான நோயாளியின் சுவாசக்குழாய் உயிர்வளியை எடுக்க மனமில்லாத உறவினர்களின் நிலையைப் போன்றது. எனவே ஐரோப்பியர்களின் வீழ்ச்சி தவிர்க்க இயலாதது.

உண்மையை ஏற்றுக்கொண்ட அமெரிக்கா தனது மகுடிக்கு ஆடும் பாம்புகளான இவர்களையும் மற்ற அணியையும் கிள்ளுக்கீரையாக மதித்துப் புறம்தள்ளி விட்டு ரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டு ஐரோப்பிய எரிபொருள் சந்தையைப் பகிர்ந்துகொள்ள தயாராகிறது.

உடைக்கப்பட்ட எரிவாயுக் குழாயைச் சீர்செய்து ஐரோப்பிய சந்தையை ரஷ்யாவுடன் சேர்ந்து பகிர்ந்து கொள்ள தயாராகி விட்டதுபோல் தெரிகிறது. அதன் நீட்சி ஈரான் உள்ளிட்ட மற்ற எண்ணெய் வள நாடுகளையும் இதில் இணைத்துக்கொண்டு உலகச் சந்தையைப் பகிர்ந்து கொண்டு எல்லோருக்கும் பொதுவான நாணய பரிவர்த்தனை முறையை உருவாக்குவதை நோக்கியதாக இருக்கலாம்.

சொந்த வங்கி மூலதனமும் அணிகளின் டொலர் கையிருப்பும் நாளையே இல்லை என்றானால் அவர்களால் எதிர்த்து எதுவும் செய்ய முடியாது. ஆனால், எழுநூறு பில்லியன் டொலர் கடன் பத்திரத்தை வைத்திருக்கும் சீனா ஏற்றுமதியை நிறுத்தினால், எல்லாமே அமெரிக்காவில் நின்றுபோகும். அதோடு உற்பத்தியை மீளக்கட்டமைப்பது அவர்களின் துணையின்றி சாத்தியமில்லை.

எனவே, எரிபொருள் வணிகத்தின் தலைமையான ரஷ்யாவுக்கும் புதிய உற்பத்தி மையமான சீனாவுக்கும் ஏற்புடைய பணமதிப்பு, பணப்பரிவர்த்தனை விதிகளையும் அதற்கான ஒப்பந்தத்தையும் எட்டும் திசையில் அமெரிக்கா நகர்கிறது என்று அனுமானிக்கலாம். அமெரிக்கா தமது அணிகளைக் காவு கொடுத்து தன்னுடைய நலனை எதிரிகளுடன் இணைந்துகொண்டு காத்துக் கொள்ளலாம். இந்தக் கெட்ட கனவு உண்மையானால் மற்ற ஐரோப்பிய ஆசிய அணிகளின் எதிர்காலம் நிச்சயம் இருண்ட காலம்தான்.

மிக சமீபத்தில் அமெரிக்க அணியான இந்தியாவின் கதி... என்று இழுக்க வேண்டாம். அது அதோ கதிதான்.

## இளைஞர் அமைப்பு அரசு மீது குற்றச்சாட்டு!

மாற்றத்துக்கான இளைஞர் அமைப்பின் (Youth for Change) தேசிய அமைப்பாளர் லகிறு வீரசேகர (Lahiru Weerasrkara) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார்.

ஆர்ப்பாட்டங்கள் மூலம் பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம், இப்பொழுது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குகிறது என அவர் குற்றம் சாட்டுகிறார். மேலும் அவர் கூறுகையில், “வற் (Value Added Tax - VAT) வரியைக் குறைப்பது, எண்ணெய் விலையைக் குறைப்பது, அரச ஊழியர்களின் சம்பளத்தையும் ஓய்வூதியத்தையும் அதிகரிப்பது, அரசாங்க சேவைக்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பது என தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி கொடுத்த வாக்குறுதிகளை அதிகாரத்துக்கு வந்த பின்னர் அதனால் நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு, தேங்காய் தட்டுப்பாடு, மின்வெட்டு என்பன ஏற்பட்டுள்ளன. இவற்றுக்கு அரசாங்கம் குரங்குகள், யானைகள், நாய்கள் மீது குற்றம் சாட்டுகிறது. ஆனால் அதேநேரம்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# ட்ரம்ப் ஏன் யூஎஸ்எயிட்டை (USAID) தாக்குகிறார்?




ஜனாதிபதி ட்ரம்ப் 'அரசாங்கத்துக்குள் இருக்கும் அரசாங்கத்தை' தாக்குவது ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது.

பல தசாப்தங்களாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் (USAID) அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு "அரசாங்கத்துக்குள் அரசாங்கமாக" வளர்ந்து வந்திருக்கிறது. அமெரிக்க பாதுகாப்புத்துறையிலும், இராஜாங்க திணைக்களத்திலும் இதன் செல்வாக்கால் இந்த நிறுவனம் அமெரிக்காவின் பூகோள ரீதியிலான நிகழ்ச்சி நிரலில் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக செயல்பட்டு வந்துள்ளது. இருந்தபோதிலும், டொனால்ட் ட்ரம்பினால் தலைமை தாங்கப்படும் வொசிங்டனில் உள்ள புதிய நிர்வாகத்தின் நடவடிக்கைகள் இந்த ஊழல்கார நிறுவனத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதைக் குறியாகக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ரஸ்யாவைப் பொறுத்தவரையில் இந்த விடயங்கள் சவால்களையும் சந்தர்ப்பங்களையும் கொண்டுள்ளன.

### அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் USAID இன் பங்கு

சோவியத் யூனியனை நேரடி ஆயுத மோதலில் தோற்கடிக்க முடியாது என்பதை அமெரிக்கா உணர்ந்ததின் காரணமாக பனிப்போர் காலத்தின் (Cold War) ஆரம்ப ஆண்டுகளில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. அதனால் இதன் செயல் தந்திரம் சமாதான ரீதியில் போட்டியிடுவதாக இருந்தது. சோவியத் யூனியனின் தாக்கத்தால் வளர்முக நாடுகளிலுள்ள சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாடடைந்ததால், அமெரிக்கா சமூகத்தின் மேல்தட்டுப் பகுதியினர் மீதும், செல்வாக்குள்ள நபர்கள் மீதும் தாக்கம் செலுத்துவது சம்பந்தமாக கவனம் செலுத்தத் தொடங்கியது. இரண்டு வல்லரசுகளுக்குமிடையிலான இந்த கருத்தியல் பிளவு வெளிவிவகாரக் கொள்கையில் அவற்றின் அணுகுமுறையைக் கோடிட்டுக் காட்டின.

**Timofey Bordachev**
(Programme Director of the Valdai Club)

அமெரிக்கா மற்றைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு கணிசமான நிதி வளங்களுடன் (கடந்த வருடம் – 2023 – ஏறத்தாழ 40 பில்லியன் டொலர்கள்) USAID ஐ ஒரு பிரதான கருவியாகப் பயன்படுத்தியது. இதன் பிரதான செயல்பாடு மேல்தட்டு வர்க்கத்தினருக்கு கிரமமான இலஞ்சம் வழங்கி அவர்களை அமெரிக்க நலன்களுக்கு இசைவானவர்களாக்குவதாகும். இந்த செயல் தந்திரம் இலத்தீன் அமெரிக்கா மற்றும் அரபு உலகம் முழுமைக்கும், அண்மையில் முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பாவுக்கும் பிரயோகிக்கப்பட்டது.

### USAID: ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் கருவி

ஸ்திரத்தன்மையையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, USAID இன் நடவடிக்கைகள் அடிக்கடி உள்நாட்டு நெருக்கடிகளை ஏற்படுத்தியதுடன், சில வேளைகளில் ஆட்சிகள் கவிழவும் உதவியது. உக்ரைன் இதற்கொரு உதாரணம். இந்த நிறுவனத்தின் தலையீடு காரணமாக அங்கு ஆழமான அரசியல் – சமூக அமைதியின்மை ஏற்பட்டது.

### பலஸ்தீனம் மீதான ட்ரம்பின் பார்வை: பலஸ்தீனர்களுக்கானதல்ல

இந்த முகவரகத்தின் செயல்பாடுகள் உலகம் முழுவதும் அமெரிக்காவை அதிக கவர்ச்சிக்கு உள்ளாக்குபவை அல்ல. மென்மையான அதிகாரம், அறிவாளிகள் வட்டத்தை கற்பனையில் ஆழ்த்துதல் என்பவை வெளிவிவகார கொள்கையின் சூழ்ச்சிகளால் ஏற்பட்டவை அல்ல. அமெரிக்கா சில வட்டாரங்களில் கவர்ச்சிகரமாக இருப்பதற்கு காரணம் அதன் இராஜதந்திர மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டதல்ல, மாறாக, தனிநபர் வாதத்திலும் சுயநலமற்ற முறையில் அதன் வாழ்க்கைமுறை வேர்விட்டிருப்பதாலும் ஆகும்.

### ட்ரம்பின் நடவடிக்கை: USAID ஐ மறு வடிவத்துக்கு உட்படுத்துவது

ட்ரம்ப் இந்த முகவரகத்தை மறு வடிவத்துக்கு உட்படுத்துவதின் நோக்கம், அதன் பரிசோதிக்க முடியாத அதிகாரத்தைத் தடுப்பதற்காகும். ஆட்களை மாற்றியமைத்தல், இராஜதந்திரிகள் மூலம் மேற்பார்வையிடுதலை அதிகரித்தல், நிதியைக் குறைத்தல், ட்ரம்பிற்கு விசுவான அதிகாரிகளை நியமித்தல் என்பவை இந்த மறு வடிவமைப்பில் அடங்கும். மற்றைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது அமெரிக்காவின் உலக ரீதியிலான ஆதிக்கக் கொள்கையின் மையமாக இருப்பதால், அதைக் கட்டுப்படுத்துவது இந்தச் சீரமைப்பின் நோக்கமல்ல. மாறாக, சுயாதீனமாகவும், தன்னிச்சையாகவும் வளரும் இதன் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாகும். ட்ரம்பின் நோக்கம் இதன் செயலூக்கமற்ற, தான்தோன்றித்தனமான போக்கை திருத்தி, அதை தனது வெளிவிவகாரக் கொள்கைக்குப் பயனுள்ள வகையில் மாற்றியமைப்பதாகும். எதேச்சாதிகாரமிக்க தலைவரான ட்ரம்ப்பால் இந்த

வகையான ஒரு அமைப்பு சுயசார்பாக செயல்படுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். எல்லா சாதனைகளும் இப்பொழுது அவரது தலைமைத்துவத்துடனும் வலிமையுடனும் பிணைக்கப்பட்டிருக்கும்.

**பனாமா: ஒரு எளிமையான பார்வை**

இந்த புதிய அணுகுமுறையின் சமீபத்திய உதாரணமாக பனாமா விவகாரத்தைப் பார்க்கலாம். சீனாவுடனான ஒத்துழைப்பை நிறுத்தி விடும்படி பனாமா அரசாங்கத்துக்கு ட்ரம்ப் நிர்வாகம் கடுமையான இராஜதந்திர அழுத்தத்தைக் கொடுத்தது. திட்டங்களை வெளிப்படுத்தாமலும், அதிக செலவில்லாமலும், பனாமா கால்வாயின் செயல்பாட்டு நடவடிக்கைகளை அமெரிக்காவால் கட்டுப்படுத்த முடியும். இந்த வெற்றி ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது: அரசியல் அழுத்தத்தால் வெற்றிகளைப் பெற முடியுமானால், மேல்தட்டு குழாமினருக்கு இலஞ்சம் கொடுத்து ஏன் கோடிக்கணக்கான பில்லியன் டொலர்களைச் செலவழிக்க வேண்டும்?

**ரஸ்யா மீதான சம்பந்தப்படுத்துதல்கள்**

இந்த நிலைமைகள் ரஸ்யாவுக்கு செயல் தந்திர முன்னேற்றங்களையும் அதே நேரத்தில் படிப்பினைகளையும் கொண்டுள்ளன. இந்த சீரமைப்புகளால் அமெரிக்காவுக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் அதன் வெளிவிவகார இலக்குகளை மட்டுப்படுத்தியுள்ளது. நடவடிக்கைகளுக்கு தற்காலிகமாக நிதியளிப்பதை நிறுத்தியிருப்பது கூட, அதனால் பயன் பெறுபவர்கள் மத்தியில் குழப்பதை ஏற்படுத்தியுள்ளதுடன், அமெரிக்க உதவியின் மீதான நம்பிக்கையையும் சிதைத்துள்ளது.

அதற்கும் மேலாக, அமெரிக்காவின் இந்த மாற்றங்கள் மேற்கின் மாதிரியை அப்படியே பிரதி செய்வதைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தையும் முன்னிலைப்படுத்தியுள்ளது. ரஸ்யா, அமெரிக்க செயல் தந்திரத்தை தனது வெளிவிவகாரக் கொள்கையில் பின்பற்றுவது குறித்துத் தொடர்ந்தும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். அதிகமான திட்டங்களை விட, எளிமையான பாரம்பரிய அணுகுமுறைகள் பனாமா கால்வாய் விடயத்தில் அமெரிக்காவுக்கு அதிக நன்மையைக் கொடுத்துள்ளது.

**USAID இன் பிதுரார்ஜிதம் (Legacy)**

USAID முகவரதத்தின் வரலாறு என்பது ஒரு விசாலமான செயற்படுத்தல் ஆகும். முதலாவதாக, இது லத்தீன் அமெரிக்கா, ஆசியா மற்றும் அரபுலகில் மேட்டுக் குடியினரையும், புத்திஜீவிகளையும் அணிதிரட்டுவதில் கவனம் செலுத்தியது. பனிப்போர் காலத்தின் பின்னர் இதன் நடவடிக்கைகள் முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள அதிகாரிகள், சட்ட நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது விஸ்தரிக்கப்பட்டது. உக்ரைனில் ரஸ்யாவின் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான பின்னர் இதன் நடவடிக்கைகள், ட்ரான்காக்கசஸ் (Transcaucasus) மற்றும் மத்திய ஆசிய பகுதிகளில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கும் பொருட்டு அங்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்த முகவரகத்துக்கு குறிப்பிடத்தக்க நிதி வளங்கள் மற்றும் செல்வாக்கு என்பன இருந்தபோதிலும், இந்தப் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையையும், செழிப்பையும் அடையும் இலக்கில் தோல்வி கண்டுள்ளது. பதிலுக்கு, இதன் நடவடிக்கைகள் பதட்டங்களையும் மோதல்களையும் உருவாக்கியதுடன். உண்மையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அமெரிக்க மேலாதிக்கத்தை முன்கொண்டு செல்வதில் செயல்பட்டுள்ளன.

**முன் செல்வதற்கான மார்க்கம்**

ட்ரம்ப் நிர்வாகத்தின் USAID இற்கு எதிரான செயற்பாடு, அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் ஏற்பட்டுள்ள ஒரு மாற்றத்தின் அறிகுறியாக இருக்கின்ற அதே நேரத்தில், அமெரிக்க மாதிரியின் (Model) எல்லைகளையும் அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இலஞ்சத்திலும், பயமுறுத்தலிலும் தங்கியிருப்பது, தாக்கமின்மையை மேலும் அதிகரிக்கும். ரஸ்யாவைப் பொறுத்தவரை தனது சொந்த வெளிவிவகார செயல் தந்திரங்களையும், பரஸ்பர மதிப்பு மற்றும் உண்மையான ஒத்துழைப்பு என்பனவற்றை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பமாகும்.

அமெரிக்கா உள்நாட்டுப் பிளவுகளாலும், தனது உலக ரீதியான பங்கை மீள் பரிசீலனை செய்வதாலும் குழப்பத்தில் இருக்கையில், ரஸ்யா தனது அயல் நாடுகளை ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளும் முயற்சிகளையிட்டு மிகவும் விழிப்புடன் இருப்பது அவசியம். USAID இன் தோல்விகள் மிகவும் தெளிவான படிப்பினைகளாகும். உண்மையான செல்வாக்கு நிர்ப்பந்தத்தின் மூலம் வருவதல்ல, அது உண்மையான கூட்டால் வருவதாகும்.

இறுதியாக, ட்ரம்ப் நிர்வாகம் USAID மீது மேற்கொண்டுள்ள “கலகம்” அமெரிக்காவின் தலையீட்டுக் கொள்கையை அடிப்படையில் மாற்றப் போவதில்லை. ஆனால் அதன் வெளிவிவகார நிறுவனத்தின் மீது கண நேர மென்னையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ரஸ்யாவைப் பொறுத்தவரை, இந்த நிலைமை ஒரு சவாலாகவும் சந்தர்ப்பமாகவும் இருக்கும் அதே வேளையில், அமெரிக்க செல்வாக்கிற்கு எதிராக உலக அரங்கில் கொள்கை சார்ந்த மிகவும் தாக்கத்துடன் செயற்படும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

(இந்தக் கட்டுரை முதலில் Vzglyad என்ற செய்திப் பத்திரிகையில் வெளியாகி, பின்னர் Russia Today (RT) செய்திக் குழுவினரால் சீர் நோக்கப்பட்டு, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதாகும். கட்டுரையின் முக்கியமான பகுதிகளை ‘வானவில்’ குழுவினர் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளனர்)

---

நடைமுறையோடு இணைக்கப்படாத தத்துவம் இலக்கற்றதென்றார் ஸ்டாலின். இலக்கற்ற தத்துவம் பயனற்றதும் போலியானதும் ஆகும். இலக்கற்ற கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டோரை நாம் ஏளனம் செய்ய வேண்டும். புறவய யதார்த்தங்களில் இருந்து பிறப்பெடுத்து, அதில் சோதிக்கப்பட்டு முகிழ்ந்த மார்க்சிய–லெனினியமே மிகச் சரியானதும், அறிவியல் பூர்வமானதும், புரட்சிகரமானதுமான உண்மையென்றாலும், அதனைப் பயிலும் பலர் அதனை உயிரற்ற வறட்டுச் சூத்திரமாக எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு செய்து தத்துவத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்டு தமக்கும், பிற தோழர்களுக்கும் தீங்கைச் செய்கின்றனர். மறுபுறத்தில் நடைமுறைப்பணியில் ஈடுபட்டுள்ள நமது தோழர்கள் தங்களின் அனுபவத்தைத் தவறாகப் பயன்படுத்துவார்களானால் அவர்களும் கூட தோல்வியுறுவர்.

**–மாவோ**

# பாரிய காற்றாலை மின் திட்டம் மன்னார் தீவை அபாயத்திற்குள்ளாக்கியுள்ளது!



ஒவ்வொரு வருடமும் குளிர் காலம் தொடங்கியதும் ஆயிரக்கணக்கான வலசைப் (Migratory) பறவைகள் உணவும் நீரும் தேடி தெற்கு நோக்கி வருகின்றன. அவை இலங்கையின் மிகப்பெரிய தீவான மன்னார் தீவை தமது தற்காலிக வசிப்பிடமாகக் கண்டு பிடிக்கின்றன. இந்த விசேடமான இடத்திலுள்ள ஈரலிப்பான பகுதிகள் 30 நாடுகளில் இருந்து வரும் அந்தப் பறவைகளுக்கு ஆறு மாதங்கள் தங்கியிருந்து உணவு தேடவும், இனப்பெருக்கம் செய்யவும், பின்னர் தம் இருப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லவும் வசதியளிக்கின்றன. வலசைப் பறவைகளுக்கு மத்திய ஆசியாவில் உள்ள பறக்கும் மார்க்கத்தில் மன்னார் முக்கியமான ஒரு தரிப்பிடமாகும்.

இருப்பினும், இதன் பாதிப்புக்குள்ளான சுற்றுச்சூழல் அபாயகரமாக மாறியுள்ளது. இலங்கை மின்சார சபையும், இந்தியாவின் அதானி குழுமமும் (Adani Group) இணைந்து இந்தத் தீவில் அமைக்கவுள்ள பாரிய காற்றாலை மின் திட்டம் தீவின் நீரோட்டத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி, மக்களையும் காட்டுயிர் இனங்களையும் பாரிய அழிவை நோக்கி இட்டுச் செல்வதுடன், தீவின் இயற்கைச் சமநிலையையும் பாதிப்புள்ளாக்கும்.. சுத்தமான எரிசக்தியை (Clean Energy) உருவாக்கும் நோக்கத்துக்கான இத்திட்டத்தின் விளைவாக பெரும் வெள்ளம் ஏற்பட வாய்ப்புண்டு. பல வீடுகளும், மீன் பிடிக்கும் பகுதிகளும் சேதமடைவதுடன், தீவின் சில பகுதிகள் சதுப்பு நிலங்களாகவும் மாறிவிடும். அத்துடன், லிமோநைற் (Limonite) என்ற தாதுப்பொருள் அகழ்வு காரணமாக நிலத்துக்கு மேலும் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பெரும்பாலும் மீனவர்களையும் விவசாயிகளையும் கொண்ட மன்னார் தீவின் 70,000 குடிமக்கள் இந்த மாற்றங்களினால் பாதிப்படைவார்கள். 2020இல் இந்த காற்றாலை மின் திட்டம் உருவாக்கப்பட்ட போது, உள்ளூர் மக்கள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அப்பொழுது அவர்கள் இந்தத் திட்டத்தால் தமது நிலத்துக்கும் வாழ்க்கைக்கும் நீண்டகால பாதிப்பு ஏற்படும் என எதிரபார்த்திருக்கவில்லை.

*சத்துரங்க பிரதீப் சமரவிக்கிரம*
(CHATURANGA PRADEEP SAMARAWICKRAMA)

ஒரு ஊடகவியலாளர் குழுவும், சுற்றுச்சூழல் நீதிக்கான நிலையத்தின் (Centre for Enviromental Justice) உறுப்பினர்களும், நிலைமையை மதிப்பீடு செய்வதற்காக அண்மையில் மன்னாருக்கு பயணித்தனர். அவர்கள் அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் (Fr.S.Marcus) அவர்களைத் தலைவராகக் கொண்ட மன்னார் பிரசைகள் குழுவைச் (Mannar Citizens'Committee) சந்தித்த போது அவர் தனது கவலையைப் பகிர்ந்து கொண்டார். மன்னார் மாவட்ட செயலகமும், அழிவுகள் முகாமைத்துவ நிலையமும் வெளியிட்ட அறிக்கைகளில், காற்றாலை விசிறிகளால் வெள்ளம் தொடர்ந்து பெருக்கெடுத்து வீதிகளையும், புகையிரதப் பாதைகளையும் மூழ்கடிக்குமானால், இந்த தீவு எதிர்காலத்தில் மனிதர்கள் வாழ முடியாத நிலையை அடைந்து விடும் என எச்சரித்துள்ளனர். சரியான திட்மிடல் இல்லாததால் இயற்கையான நீரோட்டம் பாதிக்கப்படும் போது மக்களின் வாழ்க்கையும், காட்டுயிர் இனங்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படும்.

அகில இலங்கை ஜமயத்துல் உலாமா மௌலவி அஸிம் (All Ceylon Jamiyyathul Alama Mawlavi Azim) கூறுகையில், பெரும்பாலான அரசாங்க நிறுவனங்கள் மன்னார் தீவில் அமைந்திருக்கின்றன எனச் சொன்னார். "தேவிபுரம், புதுக்குடியிருப்பு முதல் தலைமன்னார் வரை கடுமையான மழை பெய்த காலங்களில் கூட இவ்வாறான வெள்ளம் ஏற்பட்டதில்லை. இந்த காற்றாலை மின்திட்டம் வந்த பிறகும், சட்ட விரோதமாக கனிப்பொருள் அகழ்வு உருவான பிறகும்தான், இந்த மூன்று நான்கு வருடங்களில் மன்னார் தீவில் வெள்ளம் அதிகரித்துள்ளது" என அஸிம் கூறுகிறார்.

மேலும் அவர் கூறுகையில், பல இயற்கை நீரோட்டங்கள் மழை நீரை கடலுக்குள் செல்வதற்கு அனுமதிக்கும். இருப்பினும், இந்தத் திட்டங்கள் உருவாகி, வீதிகள் போடப்பட்டவுடன், இந்த இயற்கை நீரோட்டப் பாதைகள் தடைப்பட்டு விட்டன. அதன் காரணமாக, மழை நீர் கடலுக்குச் செல்ல வழியில்லாது, அதனால் ஆறு மாதங்களுக்கும் கூடுதலாக நீர் தேங்கி நிற்கிறது என அஸிம் கூறுகிறார். இந்த வெள்ளத்தினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விசாய நிலங்களில் உள்ள பயிர்கள் சேதமடைகின்றன.
சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் லிமோநைற் மணல் அகழ்வால் இந்தத் தீவு மனிதர்கள் வாழ முடியாத இடமாக மாறி வருகிறது என்றும் அவர் கூறுகிறார். மன்னாரில் சனத்தொகை பெருகி வருவதால் மக்கள் வாழ்வதற்கு போதிய நிலமில்லாமல் இருக்கின்றது. கொம்பனிகள் (Companies) ஏழை மக்களின் நிலங்களை மிகவும் மலிவான விலைக்கு வாங்குகின்றன.

மன்னாரில் உள்ள மக்கள், பாரம்பரியமாக பனை மரத்தில் உள்ள பொருட்களிலிருந்து கைவினைப் பொருட்களையும், உணவுப் பொருட்களையும் தயாரித்து அதிலிருந்தே வருமானத்தைப் பெற்று வருகின்றனர். இந்தத் திட்டங்களால் பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், அதனாலும் இந்த மக்களினது வாழ்க்கைக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் அறிக்கைகளின்படி, ஏற்னெவே உள்ள காற்றாலை மின் நிலையங்களுடன், மேலும் 20 திட்டங்கள் தலைமன்னாரில் நிறுவப்பட உள்ளதாகத் தெரிகிறது. இந்தியாவின் மிகப்பெரிய பல்தேசிய நிறுவனமான (Multinational Conglomerate) அதானி

குழுமத்தால் 56 மிகப்பெரிய காற்றாலைகள் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் அந்த நிறுவனம் இந்தத் திட்டத்திலிருந்து பின்வாங்கி விட்டதாகவும் தெரிய வருகிறது. இந்தத் திட்டத்தால் 250 மெகாவற்ஸ் (Megawatts) மின்னுற்பத்தி செய்ய முடியும் என தெரிய வருகிறது. அதானியின் இந்தத் திட்டத்தை சுற்றுச்சூழல் நீதிக்கான நிலையம் கடுமையாக எதிர்ப்பதுடன், இதன் நிர்மாணப் பணிகளை நிறுத்தும்படி நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

காற்றாலை திட்டம் ஒருபுறமிருக்க, மற்றைய கைத்தொழில்களும் மன்னாரை பாதிப்புக்குளாக்கியுள்ளன. உலகிலேயே நாலாவது பெரிய லிமோனைற் படிவம் மன்னாரில் இருப்பதால், ஆஸ்திரேலிய (Australia) நிறுவனம் ஒன்று தாதுப்பெருள் உள்ள மணலை அகழ்ந்தெடுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இந்த முயற்சி சிறிதளவே வெற்றி பெற்றுள்ளது. பேசாலையில் (Pesalai) தம்பபவானி காற்றாலை பண்ணை (Thambapavani Wind Farm) அமைந்துள்ள இடத்தில் இந்திய நிறவனம் ஒன்று கனிமப் பொருள் அகழ்வைப் பூர்த்தி செய்துள்ளது. புதிய அகழ்வு கொள்கைகளின்படி, அகழப்படும் மண்ணில் மூன்றில் ஒரு பகுதியை கொம்பனிகள் முதல் இரண்டு வருடங்களுக்கு வெளிநாடுகளக்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

சில கொம்பனிகள் உள்ளூர்வாசிகளின் நிலங்களை வாங்குவதற்கு அவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துள்ளதுடன், அவர்களை வேலைக்கும் அமர்த்தியள்ளன. மீன்பிடித்தலும், விவசாயமும் அந்த மக்களுடைய பிரதான தொழிலாக இருந்த போதிலும், தமது காணிகளை விற்கும்படி ஏழை மக்களை சில முன்னாள் ஆயுதப்படை வீரர்கள் நிர்ப்பந்திக்கின்றனர்.

அருட்தந்தை மார்க்கஸ் கூறுகையில், “வெள்ளம் அடிப்படை வாழ்க்கை நிலைமைகளை மோசமாக்கியுள்ளது. பல குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. மலசல கூட கிடங்குகள் வெள்ளத்தால் நிறைந்துள்ளதால், நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது. இதனால் மக்களுக்குப் பல நோய்கள் உண்டாகின்றன. அதனால் பல குடும்பங்கள் இப்பொழுது போத்தல் தண்ணீரை வாங்குவதால், அதற்கு மாதம் 6,000 ரூபா செலவாகிறது. இது அவர்களால் சமாளிக்க முடியாத தொகை” எனத் தெரிவித்தார். மேலும் அவர்கூறுகையில்,

“இந்த விடயம் குறித்து ஜனாதிபதி உட்பட அரச அதிகாரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பிய போதிலும், சிறிய அளவிலான நடவடிக்கைகளே எடுக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி அதிகாரிகள் தமக்கு இந்த விடயம் குறித்துத் தெரியவில்லை என்று கூறும் அதே நேரத்தில், காற்றாலை மின்சக்தி திட்டம் தொடர்பாக செய்த முறைப்பாடுகளை கடந்தகால அரசாங்கங்கள் கவனத்துக்கு எடுக்கவில்லை” என்றார்.

தாம் நடவடிக்கை எடுப்பதானால் தமக்கு விஞ்ஞானபூர்வமான ஆதாரங்கள் தேவை என அரசாங்க அதிகாரிகள் கூறுகின்றனர். இது மன்னார் மக்கள் தமது பிரச்சினைகளை முன் வைப்பதில் சிக்கல்களை உருவாக்கியுள்ளது.

மன்னார் மாவட்ட செயலாளர் (District Secretary) கே.கனகேஸ்வரன் கூறுகையில், இலங்கை மின்சார சபையாலும், அதானி குழுமத்தாலும் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்துக்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஒரு அரசாங்க ஊழியரான எனக்கு இந்தத் தீர்மானத்தை எதிர்க்கும் அதிகாரம் இல்லை எனக் கூறுகிறார்.

மன்னாரில் காற்றாலை மின் திட்டம் அமைக்கப்படுவதை எதிர்ப்பவர்கள் கூறுவது என்னவெனில், “நாம் சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாத மின் திட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் எமது கோரிக்கை என்னவென்றால், மக்கள் செறிந்து வாழும் மன்னார் போன்ற இடங்களில் இந்தத் திட்டத்தை அமைக்காமல் மக்களுக்குப் பாதிப்பில்லாத இடங்களில் இதை அமைக்க வேண்டும் என்பதே.”

சமூகம் சார்ந்த அமைப்புகள் சம்மேளனத்தின் ஒரு உறுப்பினரான சிவகரன் (Sivaharan) என்பவர் கூறுகையில், மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் ஏற்கெனவே ரிட்டானியம் மண் அகழ்வு (Titanium Sand Mining) சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு 5,000 இடங்களை அடையாளம் கண்டுள்ளனர். அவர்களது சுற்றுச்சூழல் பாதிப்பு சம்பந்தமான ஆய்வறிக்கைகள் அகழ்வுகளால் பாதிப்பு ஏற்படாது என்று தெரிவித்துள்ள போதிலும், மன்னார் மக்கள் அதற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்று தெரிவிக்கின்றார்.

மன்னார் பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் தலைவர் எம்.லக்சி குருசாந்தன் (Mannar Women's Development Federation President M.Lakshi Kurushanthan) தெரிவிக்கையில், இந்த காற்றாலை மின்சக்தித் திட்டத்தால் தமது கலாச்சாரப் பாரம்பரியம் மீறப்பட்டுள்ளதாகவும், இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அரசாங்கம் உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசிக்கத் தவறி விட்டது என்றும் தெரிவிக்கிறார்.

“பல குடும்பங்கள் வாழ்க்கைக் கஸ்டங்களால் ஏற்கெனவே இந்தியாவுக்குச் சென்று விட்டன. திட்டமிட்டபடி எல்லா காற்றாலைத் திட்டங்களும் பூர்த்தி செய்யப்படுமானால், மன்னாரில் மக்கள் வாழ்வதற்குப் போதிய நிலமிருக்காது. போதைப்பொருள் பாவனை, குடும்பத் தகராறுகள், பொருளாதாரக் கஸ்டங்கள் என்பவற்றால் ஏற்கெனவே மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது” என கிருசாந்தன் கூறுகிறார்.

மேலும் அவர் கூறுகையில், குறிப்பாகப் பெண்களே சுத்தமான குடிநீர், சுகாதாரமான உணவு என்பன இல்லாமல் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். பல குடும்பங்கள் வெள்ளம் காரணமாக தற்காலிக கூடாரங்களில் வசிப்பதால் அவர்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கிறார்.

மன்னார் மக்கள் தமது பிரச்சினைகள் சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளைக் கோரி நிற்கின்றனர்.

---

**எந்தவொரு இடத்திலும் உள்ள மக்களை எடுத்துக் கொண்டால் அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம், ஒப்பீட்டளவில் செயலூக்கம் மிக்கோர், நடுத்தரமானோர், ஒப்பீட்டளவில் பிற்பட்டோர். தலைவர்கள் மிகச் சிரிய எண்ணிக்கையிலான செயலூக்கம் மிக்க நபர்களை தம் தலைமையைச் சுற்றி அமைத்துக் கொண்டு அவர்களை ஒன்றிணைப்பதில் தேர்ச்சிபெற வேண்டும், பின் அவர்களைக் கொண்டே நடுத்தரமானவர்களை உயர்த்திடவும், பிற்பட்ட நிலையில் இருப்போரை வெற்றிகொள்ளவும் வேண்டும்.**

**– மாவோ**

# பெண்கள் மத்தியிலிருந்து ஒரு முன்னோடி கம்யூனிஸ்ட்: பார்வதி கிருஸ்ணன்

அரசியலில் கொள்கைப் பிடிப்பு, நேர்மை, அர்ப்பணிப்பு என்பது வேடிக்கை பொருளாகி போன இக்காலத்தில் கொள்கைக்காக ஒருவர் பெரிதாக என்ன செய்துவிட முடியும் எனும் கேள்விக்கு, அதிசய பதிலாக வாழ்ந்து இருக்கிறார் பார்வதி கிருஷ்ணன்!

உயர் பதவிகளால் அலங்கரிக்கப்பட்ட செல்வாக்கு மிகுந்த அரசியல் குடும்பம். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்தவர்.

ஆனால், அவரின் திருமணம் வெறும் 50 ரூபாயில் (அதுவும் கைமாற்றாகப் பெற்றது) செலவில் நடந்தது என்பதையும், திருமண விருந்தாக டீயும், சமோசாவும் மட்டுமே வழங்கப்பட்டன என்பதோ பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. வறுமையும் பட்டினியுமே சொத்தாக வாழ்ந்தவர் தோழர் பார்வதி கிருஷ்ணன்.

இந்தியாவில், ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோதே, சென்னை மாகாண முதல்வராயிருந்தவர் டாக்டர்.சுப்பராயன்.

முதல் மற்றும் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்ற முதல் இந்தியப் பெண்மணி ராதாபாய். இந்த இருவரின் மகளாக, 1916 மார்ச் 15 ஆம் நாள் பிறந்தார் பார்வதி. புகழ்மிக்க குமாரமங்கலம் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அந்தக் குடும்பத்தில் அனைவருமே அரசியலிலும் கல்வியிலும் உயர் பதவிகளிலும் சிறந்து விளங்கினார்கள்.

பார்வதியின் தந்தை சுப்பராயன் குமாரமங்கலம் சென்னை ராஜதானியின் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநிலத்தில் ராஜாஜியின் அமைச்சரவையிலும், மத்தியில் நேருவின் அமைச்சரவையிலும் மந்திரியாகப் பதவி வகித்தவர். மும்பாய் மாகாண ஆளுநராகவும் பணியாற்றினார்.

இந்திய இராணுவத்தில் தலைமைத் தளபதியாக இருந்த, ஜெனரல் பரமசிவம் குமாரமங்கலம், இந்திரா காந்தியின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம் ஆகியோர் இவரின் உடன் பிறந்த சகோதரர்கள். பார்வதியின் தாய் ராதாபாய் முதல் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்.



இத்தகைய செல்வாக்கு மிக்க குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும், பார்வதி எளிமையின் இலக்கணமாக வாழ்ந்தார். காரணம், அவர் தேர்ந்தெடுத்த பாதை 'கம்யூனிசம்'.

அப்பா, அமைச்சராக இருந்தபோதும் பார்வதி பள்ளிக்கு நடந்தும் ரிக்ஷாவிலும்தான் அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த எளிமை அவரின் தந்தையிடமிருந்து பார்வதிக்கு அளிக்கப்பட்டது. அதை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார்.

**கனகராஜ் கனகு**

கல்வியில் சாதிக்கும் கனவோடு இலண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்ற பார்வதி, ஒரு கம்யூனிஸ்டாக இந்தியா திரும்பினார். இரண்டாம் உலகப் போர் தொடங்கியிருந்த காலம் அது. இலண்டனில் படித்த இந்திய இளைஞர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபட்டு, பாசிசத்தை எதிர்த்துப் போராடினர். பல்கலைக்கழகத்தில் செயல்பட்ட 'மஜ்லின்' என்ற அமைப்பில் முதல் மாணவர் செயலாளராகச் செயல்பட்டார்.

இங்குதான் பார்வதி, "தோழர் பார்வதி" ஆனார். கம்யூனிசம் அவரை ஈர்த்தது. அங்கு மாணவச் செயற்பாட்டாளராக இருந்த என்.கே.கிருஷ்ணனைச் சந்திக்கிறார். பின்னாளில் இருவரும் காதலிக்கத் தொடங்குகின்றனர். இருவரின் குடும்பங்களிலும் இவர்களின் விருப்பத்துக்கு எதிர்ப்பும் இல்லை.

1941 ஆம் ஆண்டில், கிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக இருந்தார்.

அந்த நேரத்தில்தான் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொள்வதற்கு முடிவெடுக்கின்றனர். கையில் பணம் இல்லை. தோழர்கள் அவரவர் கையில் இருந்த காசையெல்லாம் சேர்த்துச் சிறு தொகையைத் தருகிறார்கள்.

அதிகபட்சம் 50 ரூபாய் இருந்திருக்கும். அதை வைத்து பதிவுத் திருமணம் செய்துகொள்கின்றனர். திருமணப் பதிவுத் தொகை போக எஞ்சிய காசில், கடையில் டீயும், சமோசாவும் சாப்பிடுகிறார்கள். அதுதான் அவர்களின் திருமண விருந்து!

1942 ஆம் ஆண்டில் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் நடைபெற்றது. இந்தக் காலகட்டத்தில் பி.சி.ஜோஷி தலைமையில் பம்பாயில் ஒரு கம்யூன் ஆரம்பிக்கப்பட்டது.

அதில் ஜோஷி, பி.டி.ரணதிவே போன்றவர்கள் தங்கி வாழ்ந்தார்கள்.

ஏறத்தாழ 90 தோழர்கள் அங்கே தங்கியிருந்தார்கள். நிதி வசதி மிகக்குறைவாக இருந்தது. பார்வதியும் கிருஷ்ணனும் இணைந்து தொழிலாளர் குடியிருப்புகள் பலவற்றிற்குச் சென்று தானியங்களையும் துணிகளையும் சேகரித்துக்கொண்டு வருவார்கள்.

பார்வதி அப்போது ஜோஷியின் தட்டச்சு உதவியாளராக இருந்தார். கட்சி துடிப்புடன் இயங்கிய தருணம் அது. ஆகவே, கடுமையான வேலை இருக்கும்.

பின், 1943 இல் பார்வதி ஒரு பெண் குழந்தையை பெற்றெடுக்கிறார். அதற்கு 'இந்திரா' எனப் பெயரிடுகிறார்கள்.

1944 ஆண்டுமுதல் குழந்தையுடன் பார்வதி மீண்டும் கம்யூனில் தங்குவதற்காக வந்தார். தொடர்ச்சியாகக் கட்சிப் பணிகள் இருந்தமையால் அப்போது அலுவலகத்தில் எந்தத் தோழர்கள் இருக்கிறார்களோ அவர்களே இந்திராவை வளர்த்தார்கள். தன் 5 வயதுவரை இந்திரா அந்தக் கம்யூனில்தான் வளர்கிறார்.

நாற்பதுகளின் இறுதி கம்யூனிஸ்டுகளுக்குக் கடுமையான காலகட்டம். காங்கிரஸில் வலதுசாரிகளின் குரல் ஓங்குகிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தடை செய்யப்பட்டு, பலர் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். தோழர். பார்வதியின் கணவர் கிருஸ்ணன் வேலூர் சிறையில் அடைக்கப்படுகிறார். மகளை, தந்தை வீட்டில் விட்டுவிட்டு கணவரையும் பிரிந்து தலைமறைவு வாழ்க்கை வாழ்கிறார் பார்வதி.

அந்தக் காலகட்டத்தில் அவர் கட்சிக்குப் பெரும்பணியாற்றுகிறார். தலைமறைவு தலைவர்களுக்கும், சிறையிலிருக்கும் தலைவர்களுக்கும் இடையேயான தொடர்பாளராக இருந்தார்.

உளவுப்பணி புரிந்து முக்கிய ஆவணங்களை, தகவல்களைக் கட்சிக்குக் கொண்டு சேர்க்கிறார்.

ஒருமுறை உள்துறை அமைச்சராக இருந்த தன் தந்தையுடன் வேலூர் மத்திய சிறையில் இருக்கும் கணவரைக் காணச் செல்கிறார்.

அவருக்கு ஒரு பழக்கூடையைத் தருகிறார். கிருஷ்ணன் கடுமையான கண்காணிப்பிற்கு உரிய கைதி. ஆயினும், அதிகாரிக்கு வேறுவழியில்லை.

அந்தக் கூடைக்குள் சில தடைசெய்யப்பட்ட இரகசிய ஆவணங்கள் இருந்தன. ஒரு தாயாக மகளருகில் இருக்க இயலாமல் கட்சிப் பணிகளுக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் தொடர்ந்து இயங்குகிறார் பார்வதி. இந்திய விடுதலைக்குப் பின் கட்சி மீதான தடை நீங்குகிறது. தொழிற்சங்கத்தின் பொருளாளராக 1949 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொண்ட பின், நடைபெற்ற தென் இந்திய ரயில்வே தொழிலாளர் போராட்டங்கள், கோவை மில் தொழிலாளர்களுக்கான போராட்டங்கள், நீலகிரி, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள், திருப்பூர் மில்களில் பணியாற்றி வந்த பெண் தொழிலாளர் போராட்டங்கள் எனத் தொடர்ந்த, அவரின் பணிகள் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை.

பெண்களை அரசியல் மயப்படுத்துவதோடு, தீவிர அரசியலுக்கு அவர்களைத் தயார்படுத்தவும் வேண்டுமெனச் செயல்பட்டார். பாலினச் சமத்துவத்தை முன்னெடுக்க வேண்டும் என உணர்ந்தவர்.

உலகத் தொழிலாளர் அமைப்பின் முடிவின்படி, பெண்களுக்குச் சமவேலைக்கு, சமஊதியம் என்ற கோட்பாட்டை இந்திய அரசு அமுல்படுத்த வேண்டும். பெண்களுக்கும் பூர்வீகச் சொத்தில் உரிமைவேண்டும். மத்திய அரசு ஊழியர்கள் சங்கம் அமைத்துக்கொள்ள உரிமைவேண்டும் என அகில இந்திய அளவிலான பிரச்னைகளுக்காகப் போராடினார்.

அதே சமயம், பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத்திட்டத்தை விரிவுபடுத்தி பொங்கலூர், பல்லடம் வரையுள்ள வறட்சியான பகுதிகளுக்குப் பாசன வசதி கிடைத்திட, கோவை சுற்றுப்புறப் பகுதிகளின் சிறு குறு தொழிலாளர் நலன் சார்ந்த போராட்டங்களில் எப்போதும் அவரின் குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

15 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், கட்சியில் பல்வேறு பதவிகளில் இருந்தபோதும், சுவரொட்டி, பதாகை என எதிலும் அவரின் பெயருக்கு முன் ‘தோழர்’ என்பதைத் தவிர கட்சிப் பதவியையோ, எம்.பி என்றோ குறிப்பிடக் கூடாது எனக் கண்டிப்புக் காட்டியவர் பார்வதி கிருஷ்ணன்.

உறவுகளைப் பிரிந்து பலகாலம் வாழ்ந்திருக்கிறார். நம் நாட்டு விடுதலைக்காகவும், விடுதலைக்குப் பின் மகளிர் மற்றும் தொழிலாளர் நலனுக்காகவும் உணவு, உறக்கத்தைப் பொருட்படுத்தாது இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்திருக்கிறார். பலகாலம் கட்சி தந்த உதவித் தொகையைக் கூடப் பெறாமல் கணிதமும் ஆங்கிலமும் கற்றுத் தரும் பயிற்சிப் பள்ளி நடத்தி அதில் வரும் சொற்ப வருமானத்தில் மிக எளிமையாக வாழ்ந்திருக்கிறார்.

**அரசியல் வணிகமயமாமாகிவிட்ட இந்தச் சூழலில் மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஓர் அரசியல்வாதி எவ்வாறு இருக்க வேண்டும் என, பார்வதி கிருஷ்ணன் வாழ்ந்து காட்டியிருக்கிறார். உண்மையான புரட்சியாளர்கள் உலகிற்குச் சரியாக அடையாளப் படுத்தப்படுவதில்லை. மக்களோடு மக்களாக, மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்த தோழர். பார்வதி கிருஷ்ணனின் நினைவு தினம் 20 பெப்ரவரி. இந்திய அரசியலின் கம்பீரமான அடையாளமான பார்வதி கிருஷ்ணன் அனைவருக்குமான முன்னுதாரணம்.**

## *சிரிய கம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டதை ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது!*

சிரியாவின் (ஒன்றுபட்ட– Unified) கம்யூனிஸ்ட் கட்சியையும், சிரியாவின் (பக்டாஸ் – Bakdash) கம்யூனிஸ்ட் கட்சியையும் சிரியாவின் புதிய அரசாங்கம் தடை செய்துள்ளதை ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. ஜனநாயகத்தையும் பன்மைத்துவத்தையும் உயர்த்திப் பிடித்ததிற்காக இந்த இரண்டு அமைப்புகளும் ஜனவரி 29ஆம் திகதி தடை செய்யப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், “புதிய அரசின் நடவடிக்கைகளை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். முன்னைய அரசாங்கத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இடைக்கால அரசாங்கம் எல்லா சிரிய மக்களும் கலந்து கொள்ளும் தேசிய ரீதியிலான கலந்துரையாடல்களை நடத்துவதாக அறிவித்திருந்தது. ஆனால் அதன் நடவடிக்கைகள் அந்த வாக்குறுதிகளுக்கு முரண்பாடாக இருக்கின்றன” எனத் தெரிவித்துள்ளது.

மேலும் அது கூறுகையில், புதிய அரசின் நடவடிக்கைகள் “நீதியற்றவை” என்று வர்ணித்ததுடன், கம்யூனிஸ்ட் கட்சிகள் மீதான தடையை மீளப் பெறுவதுடன், அமைப்பு ரீதியிலான, அரசியல் ரீதியிலான நடவடிக்கைகள் உட்பட எல்லாவிதமான ஜனநாயக சுதந்திரங்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். புதிய அரசாங்கம் நாட்டின் ஐக்கியம், சுதந்திரம், தேசிய ஒருமைப்பாடு என்பனவற்றைப் பேணும் வகையில் ஒரு புதிய சிரியாவை சுதந்திரமாக கட்டியெழுப்புவதற்கு சிரிய மக்களை அனுமதிக்க வேண்டும் எனவும் ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.


---

எந்தவொரு மக்கள் இயக்கத்தைக் கட்டமைக்கும்போதும், நம் ஆதரவாளர்கள், எதிரிகள், நடுநிலையாளர்களிடம் ஒரு அடிப்படையான ஆய்வும், விசாரணையும் அவசியம். நாமாக நம் அகவய உணர்வுக்கு ஏற்ப எந்த அடிப்படையும் இல்லாமல் பிரச்சனைகளை முடிவுசெய்யக் கூடாது.

**–மாவோ**

# சர்ச்சைக்குரிய USAIDஐ திறந்த மனதுடன் ஆராய வேண்டும்!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் (USAID) அளித்து வரும் வெளிநாட்டு உதவியை 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்திருக்கிறார். "அமெரிக்கா முதன்மையில்" (America First) என்ற வெளிவிவகாரக் கொள்கையைத் தழுவி அவர் எடுத்த இந்த முடிவு, உலகம் முழுவதும், குறிப்பாக பல திட்டங்களுக்காக அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்று வரும் வளர்முக நாடுகளில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




இந்த நிதியை நிறுத்துவது என்ற அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பு பல நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளை, குறிப்பாக இலங்கையில் அரசியல் கிளர்ச்சிகளை உண்டு பண்ணும் நடவடிக்கைகளைத் தடுத்துள்ளது.

இந்த நிதி சம்பந்தமாக எக்ஸ் (X) தளத்தில் (முன்னர் ருவிட்டர் – formerly Twitter) பதிவிட்ட ட்ரம்ப், "USAID இடமிருந்து 260,000,000,00 டொலர்களைப் பெற்ற ஜோர்ஜ் சோரோஸ் – அமெரிக்க கோடீஸ்வரர் – (George Soros) இந்தப் பணத்தின் மூலம் குழப்பங்களை உருவாக்கவும், அரசாங்கங்களை மாற்றவும், இலங்கை, பங்களாதேஸ், உக்ரைன், சிரியா, ஈரான், பாகிஸ்தான், இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தனிப்பட்ட ஆதாயங்கள் பெறவும் பயன்படுத்தப்பட்டுள்ளது" எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் 2022இல் எதிர்பாராத பொருளாதார நெருக்கடியால் அரசியல் நெருக்கடி உருவாகி, அரசாங்கத்துக்கு எதிராக இலட்சக்கணக்கான மக்கள் கிளர்ந்தெழுந்ததால் தனது ஜனாதிபதி பதவியைத் துறந்த கோத்தபாய ராஜபக்ச, தனது ஆட்சி மாற்றத்துக்கு வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடே காரணம் என முன் வைத்த குற்றச்சாட்டை ட்ரம்பின் பதிவு நியாயப்படுத்துகிறது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ (Wimal Weeravansa) எழுதி வெளியிட்ட "ஒன்பது" (Nine) என்ற நூலில் ராஜபக்சவுக்கு எதிராக பல மாதங்களாக நடைபெற்ற முக்கிய சம்பவங்களைத் தேதி வாரியாகக் குறிப்பிட்டுள்ளதுடன், USAID இன் மீதும் அதனால் பயன்பெற்றவர்கள் மீதும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீதும் குற்றச்சாட்டுகளையும் முன் வைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளார். அவரது பதிவு ட்ரம்பின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச (Namal Rajapaksa) இலங்கையில் USAID இன் நிதி செலவினங்கள் சம்பந்தமாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைத்து விசாரிக்கும்படி சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு (Jagath Wickramaratne) எழுதிய கடிதத்திற்கு பதிலளித்த அவர் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். பின்னர் பத்தரமுல்லவில் உள்ள சிறீலங்கா பெரமுன தலைமை அலுவலகத்துக்குச் சென்றஅமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Sung) இந்த விடயம் குறித்து அந்தக் கட்சியின் தலைவர்களுடன் உரையாடியுள்ளார்.

USAID நிதியுதவியுடன் சர்வதேச ஆய்வு மற்றும் பரிமாற்ற சபை என்ற நிறுவனம் (International Research and Exchanged Board) "ஒரு ஜனநாயக இலங்கைக்கு ஊடக அதிகாரம்" என்ற தலைப்பின் கீழ் இலங்கை ஊடகவியலாளர்களுக்கு 7.9 மில்லியன் செலவில் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு எதுவித ஆதாரமும் இல்லை என வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

USAID இன் நிதியும், ஏனைய வெளிநாட்டு நிதிகளும், இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் அரசாங்கங்களின் ஊடாகவோ அல்லது உள்நாட்டு – வெளிநாட்டு அரசுசாரா அமைப்புக்கள் (NGOs) ஊடாகவோதான வருகின்றன.

1960 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் உள்ள பாடசாலைகளில் USAID மூலம் வழங்கப்பட்ட பிஸ்கட்டுகளின் வாசனையையும் சுவையையும் அந்தக் காலகட்டத்தில் கல்வி கற்றவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால், இப்பொழுது உள்நாட்டு – வெளிநாட்டு அரசுசாரா அமைப்புகள் மீது மக்களுக்கு எதிர்மறையான, வெறுப்பூட்டும் நிலைப்பாடே இருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான் USAID இன் பணம் "குழப்பங்களை ஏற்படுத்தவும், அரசாங்கங்களை மாற்றுவதற்கும் பயன்பட்டுள்ளது" என்ற ட்ரம்பின் விமர்சனம் வந்துள்ளது.

அரச சார்பற்ற அமைப்புகள் எப்பொழுதும் கபடத்தனமானவையோ, அல்லது அவற்றின் திட்டங்கள் பாதகமான அல்லது ஆபத்தானவையோ அல்ல. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாத யுத்தம் நடைபெற்ற காலத்திலும், 2004 இல் சுனாமி ஏற்பட்ட வேளையிலும் அந்தப் பகுதிகளில் உள்நாட்டு – வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் எதுவும் செயற்படவில்லை.

உள்நாட்டு – வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகளும், நிதி வழங்கும் USAID, UNDP, UNHCR போன்ற முகவரகங்களும், அரசுகளும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது, ஊடக சுதந்திரம், மனித உரிமைகள், பெண்களின் உரிமைகள், நீதி நியாயமான தேர்தல்கள் என்பவற்றைப் பல நாடுகளில் பாதுகாப்பதில் புகழ் பெற்றவை.

சர்வதேச அரசியலுக்குள் நுழைந்த

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# பாசிசம் குறித்து ஜோர்ஜ் டிமிட்ரோவ்

**(இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பற்றி முன்கூட்டியே புரிந்து கொள்வதற்காக)**

பாசிசம் அதிகாரத்துக்கு வருவது என்பது நிதி மூலதனத்தின் குழுக்களோ அதன் வேறு கூட்டமோ ஒரு குறிப்பிட்ட தேதியில் பாசிச சர்வாதிகாரத்தை நிறுவத் தீர்மானித்த போதிலும், அதன் வடிவம் அவ்வளவு சுலபமானதும் சிக்கல் இல்லாததும் என்று கருத முடியாது.

பாசிஸ்ட் தாக்குதல்களின் தீர்மானமான சமயத்தில் ஜெர்மனியிலும் வேறு பல இதர பாசிஸ்ட் நாடுகளிலும் உழைக்கும் மக்களின் ஒரு பெரிய பகுதி இரத்த வெறி பிடித்த நிதி மூலதனப் பூதமான பாசிசத்தை, தங்களது தீராத ஆகக்கொடுமையான எதிரியான பாசிசத்தை, அடையாளம் காணத் தவறிவிட்டார்கள்.

பாசிசத்திற்கு மக்களிடமிருந்த செல்வாக்கிற்கு என்ன ஆதாரம்?

பாசிசம் மக்களைக் கவர முடிந்ததிற்குக் காரணம், அது மக்களுடைய ஆக அவசர அவசியமான தேவைகளையும் கோரிக்கைகளையும் பற்றி வாய்ச் சவடால் அடித்துப் பேசி வேண்டுகோள் விடுக்கிறது. பாசிசம் மக்களுடைய உள்ளங்களிலே ஊறிப்போயிருக்கிற வெறுப்புகளையும் தப்பெண்ணங்களையும் கிளறித் தூண்டிக் கிளப்பி விடுவது மட்டுமல்ல, மக்களுடைய நல்லுணர்வையும் நியாயவுணர்வையும், சில சமயங்களில் புரட்சிகரமான பாரம்பரியங்களையும் கூட பயன்படுத்திக் கொள்கிறது.

பாசிசம் தீவிரமான கடைகோடி ஏகாதிபத்தியவாதிகளின் நலவுரிமைகளுக்காகச் செயல்படுகிறது. ஆனால் அது, புறக்கணிக்கப்பட்ட கேவலமாக நடத்தப்பட்ட ஒரு தேசத்தின் கவுரவத்தைக் காப்பாற்ற முன் நிற்பதைப் போல தன்னைக் காட்டிக் கொள்கிறது. அழி செயலால் அவமதிக்கப்பட்ட தேசிய உணர்வுகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

பாசிசத்தின் குறிக்கோள் மக்களை



**Georgi Dimitrov**

எந்தவிதமான தங்குதடையுமின்றி ஆகக் கடுமையாகச் சுரண்டுவதாகும். ஆனால் அது பேசுவதெல்லாம் தேர்ச்சிமிக்க முதலாளித்துவ எதிர்ப்பு வாய்வீச்சாகும். கொள்ளைத்தனமான முதலாளித்துவ வர்க்கம், வங்கிகள், முதலாளித்துவ கூட்டுக் கொம்பனி டிரஸ்ட்டுகள், நிதி மூலதனத் திமிங்கிலங்கள் ஆகியவை மீது உழைக்கும் மக்களுக்குள்ள மட்டற்ற வெறுப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அரசியல் பக்குவம் குறைவாகவுள்ள மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டி கோசங்களை முன் வைக்கும்.

பாசிசம் மக்களைப் படுமோசமான பெரும் ஊழல் மிக்க பேராசை மற்றும் இலஞ்ச வெறி பிடித்த நபர்களின் வாய்த்தீனியாகத் தள்ளி விடுகிறது. ஆனால் மக்களுக்கு முன்பாக "ஒரு நேர்மையான ஊழலற்ற அரசாங்கம்" என்ற கோசத்துடன் முன் வருகிறது. முதலாளித்துவ ஜனநாயக அரசாங்கங்கள் மீது மக்களுக்குள்ள பிரேமை நீங்கியுள்ளதை ஊகம் செய்து மனக்கோட்டை கட்டிக் கொண்டு பாசிசம் வஞ்சகத்தனமாக ஊழலை எதிர்த்துப் பேசுகிறது.

மக்கள் ஏமாற்றமடைந்து பழைய முதலாளித்துவக் கட்சிகளை கை கழுவி விட்டு வெளியே வரும்போது பாசிசம் முதலாளித்துவ வர்க்கத்தில் ஆகப் பிற்போக்கான வட்டாரங்களின் நலவுரிமைகளுக்காக அம்மக்களை இடை மறிக்கிறது. இது முதலாளித்துவ அரசாங்கங்களை மிகக் கடுமையாக ஆவேசமாகத் தாக்குவதன் மூலமும், பழைய முதலாளித்துவ கட்சிகளின்பால் மிகவும் கடுமையாக எந்தவித சமரசமுமின்றி நடந்து கொள்வதன் மூலமும் மக்களின் நல்லெண்ணத்தை உருவாக்கி விடுகிறது.

பாசிசம் அந்தந்த நாட்டின் தேசிய சிறப்பியல்களுக்குத் தக்கபடியும், இன்னும் ஒரே நாட்டில் பல்வேறு சமூகப் பிரிவுகளின் தனித் தன்மைகளுக்குத் தக்கபடியும் தம் வாய்ச் சவடால்களை அமைத்துக் கொள்கிறது. குட்டி முதலாளித்துவப் பகுதியினர், இன்னும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியினர் கூட, இல்லாமை, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைப் பாதுகாப்பின்மை ஆகிய கொடுமைகளால் அவதிப்பட்டு, விரக்தியடைந்து பாசிசத்தின் சமுதாய இனவெறி பிடித்த வாய்ச்சவடாலுக்கு இரையாகி விடுகின்றனர்.

பாசிசம் அதிகாரத்துக்கு வரும்போது முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக, "தேசம் முழுவதின்" சார்பில் தேசத்தின் "மீட்சிக்காக" ஒரு "புரட்சிகரமான" இயக்கம் என்று கூறிக்கொண்டுதான் ஆட்சிக்கு வருகிறது.

(பல்கேரிய (Bulgaria) கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான ஜோர்ஜ் டிமிட்ரோவ் கம்யூனிஸ்ட் அகிலத்தின் (Communist International) செயலாளராக இருந்தவர். அந்த அகிலத்தின் ஏழாவது உலக காங்கிரஸ் 1935 ஓகஸ்டில் நடைபெற்றது. அதில் அவர் முன்வைத்த அறிக்கையும், ஆற்றிய முடிவுரையும் 'ஐக்கிய முன்னணி தந்திரம்' என்ற தலைப்பில் நூலாக வந்துள்ளது. அதில் உள்ள ஒரு பகுதிதான் மேலே தரப்பட்டுள்ளது)

---

மக்கள் திரள் விழித்துக்கொள்ளும் முன்பே நாம் தாக்குதலில் இறங்கிட முயல்வோம் என்றால் அது சாகசவாதமாகிவிடும். மக்களின் விருப்பத்திற்கு எதிராக செயல்படுவதற்கு அவர்களுக்கு உத்தரவிடுவோமென்றால் அது நிச்சயம் தோல்வியிலேயே முடியும். மக்கள் முன்னேற்றத்தை எதிர்நோக்கும்போது நாம் அதற்கு முயலாமலிருந்தால் அது வலதுசாரி சந்தர்ப்பவாதமாகிவிடும்.

**– மாவோ**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

முதலாளித்துவக் கட்சிகள் அனைத்தும் எப்பொழுதுமே நிராகரித்து வந்த போதிலும், சில உள்நாட்டு மற்றும் சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாக, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சில ஆளும் கட்சிகள் சில தீர்வுகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் உடன்பட்டுள்ளன.

அவ்வாறு உருவானவைதான் 1957இல் பிரதமராக இருந்த பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட பண்டா – செல்வா உடன்படிக்கை, 1965இல் பிரதமர் டட்லி சேனநாயக்க தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்ட மாவட்ட சபைகள் உடன்படிக்கை, 1978இல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவரத்தன தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் செய்து கொண்ட மாவட்ட அபிவிருத்திச் சபை ஒப்பந்தம், 1987இல் இந்திய – இலங்கை அரசுகளுக்கிடையில் உருவான ஒப்பந்தம், 2000 ஆம் ஆண்டில் சந்திரிக அரசாங்கம் முன் வைத்த தீர்வுத் திட்டம் என்பனவாகும்.

இதிலிருந்து ஒரு விடயம் நிரூபணமாகின்றது. அதாவது, ஆளும் சிங்கள முதலாளித்துவத் தலைமைகள் தமிழ் மக்களின் இன உரிமைகளை வழங்க மறுத்தாலும், இந்த உடன்படிக்கைகள் மூலம் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், அவர்களுக்கென்று தனித்துவமான பிரச்சினைகள் உண்டு என்பதையும் அவர்கள் காலத்துக்குக் காலம் ஏற்று வந்திருக்கிறார்கள் என்பதே அது.

மறுபக்கத்தில், தமிழ் மக்களின் இன உரிமைப் போராட்டம் அகிம்சை வழியில் ஆரம்பித்து, பின்னர் ஆயுதப் போராட்டம் என்ற வடிவத்தை எடுத்து, இறுதியில் தோற்கடிக்கப்பட்டாலும், அதன் மூலம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்ந்து விட்டது அல்லது முடிவுக்கு வந்துவிட்டது என்பது அதன் அர்த்தம் அல்ல.

தமிழ் மக்கள் நடத்தி வந்த போராட்டத்தின் தோல்வி என்பது ஒரு கட்டத்தின் தோல்வியே தவிர, வரலாற்றின் முழுமையான தோல்வி அல்ல. இதுவரை நடைபெற்ற போராட்டங்கள் தோல்வி அடைந்ததிற்கான காரணம், தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தலைமைகளின் பிற்போக்கான வர்க்கக் குணாம்சமும், அதன் காரணமாக அவர்கள் பின்பற்றிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் தவறுகளுமே. எனவே, "கப்பல்கள் வந்து போயிருக்கின்றனவே தவிர, துறைமுகம் அப்படியேதான் இருக்கின்றது".

ஆனாலும், இலங்கையின் தற்போதைய நிலைமையில் ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக, இதுவரை காலமும் ஆட்சியில் இருந்து வந்த கட்சிகள் அகற்றப்பட்டு, புதிய கட்சி ஒன்று (ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி) ஆட்சிக்கு வந்துள்ளது. இது வெறுமனே கட்சி அரசியல் மாற்றம் மட்டுமல்ல, வர்க்க அடிப்படையிலான மாற்றமும் கூட.

இலங்கை சுதந்திரமடைந்த போது, பிரித்தானிய காலனித்துவம் இலங்கையின் தரகு முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியிடம் அதிகாரத்தைக் கையளித்துச் சென்றது. அக்கட்சி பின்பற்றிய விதேசிய சார்புக் கொள்கைகள் காரணமாக, அக்கட்சியை நிராகரித்த இலங்கை மக்கள் (பிரதானமாக சிங்கள மக்கள்), தேசிய நலன்களை முன்னிறுத்திய பண்டாரநாயக்கவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தை 1956 இல் பதவிக்குக் கொண்டு வந்தனர். இருப்பினும் பிரித்தானியர்கள் அறிமுகப்படுத்திய 'வெஸ்ற் மினிஸ்ரர்' என்ற இரு கட்சி ஆட்சி முறை காரணமாக, இலங்கையில் கடந்த 75 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு மாறி மாறி ஆட்சிக்கு வந்துள்ளன.

ஆனால், சர்வதேசிய ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும், தேசிய ரீதியிலான மாற்றங்கள் காரணமாகவும், குறிப்பாக பொருளாதார மாற்றங்கள், இந்த இரு கட்சிகளினதும் கொள்கைகள் ஏறத்தாழ ஒன்றாகவே மாற்றம் அடைந்துள்ளன. அது மட்டுமின்றி, இந்தக் கட்சிகளின் அரசாங்கங்கள் 75 ஆண்டுகளாகப் பின்பற்றிய கொள்கைகள் காரணமாக, 2022இல் நாடு முன்னெப்போதையையும் விட மோசமான பொருளாதார வங்குரோத்து நிலையை அடைந்தது. அதன் காரணமாக மக்கள் ஆட்சி மாற்றம் கோரிக் கிளர்ச்சி செய்ததினால், பதவியில் இருந்த ஆட்சி கவிழ்ந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான், 2024இல் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய கட்சி மக்களின் மனநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது. இந்தக் கட்சி வர்க்க அடிப்படையில் இலங்கையின் சிறு முதலாளி வர்க்க மற்றும் நடுத்தர வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியாகும்.

ஆனால் முதலாளித்துவம் என்னும் போது, அது ஒன்றுதான். சில சமூக மற்றும் உற்பத்திச் சூழ்நிலைகளால் முதலாளித்துவம், தரகு முதலாளித்துவம், தேசிய முதலாளித்துவம், சிறு முதலாளித்துவம் அல்லது குட்டி முதலாளித்துவம் என சில கட்டங்களில் பிரிந்து நின்றாலும், அவை அடிப்படையில் முதலாளித்துவத்தின் பல்வேறு கூறுகள்தான்.

அதற்கு உதாரணமாக, இலங்கையில் தரகு முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியும், தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரு கட்டத்தில் இணைந்து ஆட்சி செய்ததைக் கூறலாம்.

இன்றைய உதாரணமாக, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் குறிப்பிடலாம். தம்மை சோசலிசவாதிகள் என்றும், தாம் இலங்கையின் ஆட்சி முறையில் அடிப்படையான அமைப்பியல் மாற்றம் (System Change) கொண்டுவரப் போவதாகவும் கூறியே இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தது. ஆனால் அவர்களால் சோசலிசக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவோ, அடிப்படையான அமைப்பியல் மாற்றத்தைக் கொண்டு வரவோ முடியவில்லை. முன்னைய ரணில் விக்கிரமசிங்கவின் பெரு முதலாளித்துவ அரசாங்கம் வகுத்த கொள்கையின் அடிப்படையிலேயே இன்றைய அரசாங்கமும் செயல்பட்டு வருகின்றது.

இவையெல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் இன்றைய அரசாங்கத்தின் இனப்பிரச்சினை சம்பந்தமான கொள்கை. இந்த அரசாங்கம் சிறுபான்மை இனங்கள் எதிர்நோக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு உலகில் சோசலிச நாடுகளில் மட்டுமின்றி, முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் கூட ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு வழங்கத் தயாரில்லை.

இந்த விடயத்தில் இலங்கையில் முன்னைய காலங்களில் இருந்த அரசாங்கங்களை விட மிகவும்

மோசமான முறையில் இன்றைய அரசாங்கம் சிங்களப் பேரினவாதக் கொள்கையைப் பின்பற்றுகிறது. ஆனால் அதை மறைக்க, தமது ஆட்சியில் எல்லா இனங்களும், எல்லா மதங்களும், எல்லா மொழிகளும் சமம் என்ற போலி வேசத்தைப் போடுகின்றது.

இனப் பாகுபாடு என்பது, "எல்லோரும் சமம்" என்ற வாய்ச் சவடால் அடிப்பதால் தீரும் பிரச்சினை அல்ல. அல்லது ஆட்சி செய்பவர்களின் நல்லெண்ணத்தால் தீரும் பிரச்சினையும் அல்ல. அப்படி வாய்ப் பேச்சில் எல்லா விடயங்களையும் தீர்க்கலாம் என்றால் அரசியல் அமைப்பு எதற்காக? நாடாளுமன்றம், சட்டங்கள், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் போன்றவை எதற்காக? எல்லாவற்றையும் வாய்ச் சொல்லால் சொல்லி நம்பிக்கை அளித்துத் தீர்க்கலாமே?

உண்மை அதுவல்ல. எல்லவாற்றையும் உறுதிப்படுத்தி, நிறைவேற்றுவதற்காக சட்டரீதியான சில அமைப்பு முறைகள் தேவைப்படுகின்றன.

அது போலத்தான் இனப் பிரச்சினையும். சிறுபான்மை இனங்களின் உரிமைகள் உண்மையான முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால், அவர்களுக்கென்று சில நிர்வாக ரீதியிலான அதிகார அமைப்புகள் தேவை. அவற்றை அதிகாரப் பகிர்வின் மூலம் மட்டுமே ஏற்படுத்த முடியும்.

ஆனால் இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அதைச் செய்ய முடியாது. ஏனெனில், இவர்களது தலைமைக் கட்சி ஜே.வி.பி. ஆகும். அந்தக் கட்சி சிங்கள இனவாதத்தில் பிறந்து, அதையே மூலதனமாகக் கொண்டு வளர்ந்த கட்சியாகும். அது பலவீனமாக இருந்த காலத்திலேயே இனப் பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையுமே மூர்க்கத்தனமாக எதிர்த்த கட்சியாகும். அப்படியான ஒரு கட்சி அசுர பலத்துடன் ஆட்சிக்கு வந்தால் தான்தோன்றித்தனமாக நடக்குமே தவிர, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எண்ணாது.

இதுவரை காலமும் இலங்கையில் ஆட்சியில் இருந்த கட்சிகள் போலவே இன்றைய அரசாங்கத்தின் இருப்புக்கும் அடிப்படையாக இருக்கப் போவதும் சிங்கள இனவாதமே.

விரைவில் இன்றைய அரசாங்கத்தின் முகத்திரை கிழியும். அது வெளிப்படையாக ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டையும், பெரு முதலாளித்துவ நிலைப்பாட்டையும், சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டையும் எடுப்பது தவிர்க்க முடியாதபடி நிகழும்.

ஏனெனில், வர்க்க ரீதியாக குட்டி முதலாளித்துவ வர்க்கத்துக்கு சமூக அடிப்படைப் பலம் இல்லாதபடியால், அது பெரும் முதலாளித்துவத்துடன் கலப்பதும், ஆட்சியில் இருந்தால் பாசிசத்தை ஒரு வழிமுறையாகப் பின்பற்றுவதுமே பல நாடுகளில் நிகழ்ந்து வந்திருக்கிறது. இலங்கையின் இன்றைய அரசாங்கமும் அதற்கு விதி விலக்கல்ல.

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப மக்களின் நலன்களை வெட்டி வருகிறது.

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்துக்கு நாம் 22 பரிந்துரைகளை முன் வைத்துள்ளோம். ஆனால் அரசாங்கம் அது சம்பந்தமாக எமக்கு எவ்விதமான பதிலையும் இதுவரை தரவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள தமது விவசாயிகள் அமைப்பு அங்குனாகோலபெலெஸ்ஸ (Angunakolapelessa) என்ற இடத்தில் ஏற்பாடு செய்த ஒரு விவசாயிகளுக்கான கருத்தரங்கை ஜே.வி.பி. ஆதரவாளர்கள் அந்த இடத்துக்கு வந்து குழப்பியதாக முன்னிலை சோசலிசக் கட்சி (Frontline Socialist Party) குற்றம் சாட்டியுள்ளது.

இந்தக் கருத்தரங்கு விவசாயத்துறையில் ஏகபோகவாதிகளும், மா∴பியா கும்பல்களும் இணைந்து விவசாயிகளையும் நுகர்வோரையும் ஒருங்குசேரச் சுரண்டுவதை அம்பலப்படுத்தும் பொருட்டு நடத்தப்பட்டதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் செயற்பாட்டாளர் புபுது ஜெயகொட (Pubudu Jayagoda) தெரிவித்துள்ளார்.

இதே போன்ற கருத்தை விவசாயிகள் போராட்ட இயக்கத்தின் (Farmers Struggle Movement) இணை இணைப்பாளர் விமல் வட்டுஹேவா (Wimal Wattuhewa) அவர்களும் தெரிவித்துள்ளார்.

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

போது அமெரிக்கா ஒன்றும் புனிதமாக இருக்கவில்லை. பல அரசாங்கங்களைத் தேர்தல்களின் மூலம் கவிழ்ப்பதற்கும், இரத்தம் சிந்திய சதிகளின் மூலம் கவிழ்ப்பதற்கும் அமெரிக்க நிதி பல தசாப்தங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது உண்மையாகும். இந்தோனேசியாவின் சுகர்ணோ (Sukarno of Indonesia) அரசாங்கம், சிலியின் சல்வடோர் அலென்டே (Salvador Allende of Chile) அரசாங்கம் என்பவை அமெரிக்காவின் எதிர்மறையான நடவடிக்கைகளுக்கு உதாரணங்களாகும். காஸாவில் (Gaza) மேற்கொள்ளப்படும் இனப் படுகொலைக்கு (Genocide) அமெரிக்கா எல்லாவிதமான உதவிகளையும் வழங்கி வருகிறது. அத்துடன், பல நாடுகளில் மேற்கொள்ளப்படும் அமெரிக்கத் திட்டங்கள் அதன் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மறைக்கும் திரைகளாக இருக்கின்றன.

அதற்காக, எல்லா அமெரிக்கத் திட்டங்களும் சந்தேகத்துக்குரியவை என்றோ, படுகுழியில் தள்ளுபவை என்றோ கருதிவிட முடியாது. இலங்கையில் 2022இல் ஏற்பட்ட "அரகலய" (Aragalaya) போராட்டம் உள்நாட்டு – வெளிநாட்டு அரசியல் நிகழ்ச்சியின்படி நடைபெற்றது என்பதை விட, பொருளாதார நெருக்கடி காரணமாக எழுந்த ஒரு தன்னிச்சையான போராட்டமாகும். எனவே, இலங்கையில் சர்ச்சைக்குரிய USAID இன் நடவடிக்கைகள் ஸ்தூலமான அடிப்படையில் திறந்த மனத்துடன் ஆராயப்பட வேண்டும்.

(மேலே தரப்பட்டிருப்பது கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெயிலி மிரர்' - Daily Mirror - ஆங்கிலத் தினசரியின் 2025 பெப்ருவரி 18ஆம் திகதிய இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் முக்கியமான பகுதிகளாகும்)

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

இந்தோனேசியா, வியட்நாம், தாய்லாந்து ஆகியனவற்றின் வளரும் பொருளாதாரங்களும் ஆசியாவின் உற்பத்தித் துறைக்கான உலகளாவிய விநியோகச் சங்கிலியின் ஒரு பகுதியாகும்.

இது வெறுமனே பூகோள ரீதியிலான விநியோகச் சங்கிலியில் எம்மை இணைத்துக் கொள்வதற்கான அரிய வாய்ப்பை வழங்குவது மாத்திரமின்றி, பாரம்பரிய ஏற்றுமதி முறையிலிருந்தும் எம்மை விடுவித்துக் கொள்கிறது. இந்த மாறுபாட்டுக்கு வியட்நாம், தாய்லாந்து, மலேசியா என்பனவற்றின் பொருளாதார வளர்ச்சி உதாரணமாகும்.

(இந்தக் கட்டுரை கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியொன்றில் வந்ததாகும். கட்டுரை எழுதியவரின் பெயர் பத்திரிகையில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை)

# பட்ஜெட் முன்மொழிவுகள், சமநிலைப்படுத்தல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அளவீடு!




இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தனது அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை (Budjet) முன் வைத்திருந்தார். அதிக வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, ஏதும் செய்யாமல் இருந்த ஊழல்கார ஆட்சியாளர்களால் களைப்பும் வருத்தமும் அடைந்திருந்த மக்களின் வாக்குகளால்தான் அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியானார்.

ஆனால் துக்ககரமாக திசநாயக்கவின் இப்பொழுதைய நிலையில் அவரது அமைச்சர்களாலோ, பிரதி அமைச்சர்களாலோ, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியவில்லை. ஜே.வி.பி. மற்றும் இணைந்த தேசிய மக்கள் சக்தி கூட்டு தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக அவருக்கு மக்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை யும் அளித்திருந்தனர்.

தமக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்களால் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்து கொண்ட உடன்படிக்கை காரணமாக வறிய மக்களுக்கு ஏற்பட்டிருந்த கஸ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக நாணய நிதியத்துடன் மறு பேச்சுவார்த்தையைத் தாம் நடத்துவோம் என ஜனாதிபதியும் அவரது கூட்டணியினரும் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்தனர்.

தூரதிஸ்டவசமாக மாற்றங்கள் செய்வதை நாணய நிதியம் ஏற்றுக் கொள்ளவில்லை. வறிய மக்களின் துன்பங்கள் நீடிக்கின்றன. ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர்தான் நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவுக்கு அரசிக் கையிருப்பு இல்லை என்பது தெரிய வந்தது. அரிசியின் விலை வானாளாவிய உயரத்துக்குப் போனது. இது வறிய மக்களை மீண்டும் கடுமையாகத் தாக்கியது. அரிசி ஆலை முதலாளிகள் செயற்கையாக அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்கள் எனக் கருதியதால், அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு அவர்கள் கட்டுப்படாவிட்டால், அரிசி ஆலைகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர நேரிடலாம் என ஜனாதிபதி பயமுறுத்தல் விடுத்தார். வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கு உணவூட்டுவதற்கு அரிசி பயன்படுத்தப்படுவதால்தான் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுளளது என ஜனாதிபதி கூற, அது ஒரு நகைச்சுவையாக மாறியது.

கவலைக்குரிய விடயம் என்னவெனில், இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்த பின்னரும், அரிசி நெருக்கடி அச்சமூட்டும் வகையில் தொடர்கிறது.

அடுத்ததாக, இலங்கையில் சமையலில் ஒரு முக்கியமான பொருளாக இருக்கும் தேங்காயின் தட்டுப்பாட்டை எடுத்துக் கொள்வோம். நாட்டில் உள்ள மக்களுக்கு தேங்காய் அபூர்வமானதாகவும், கண்டு பிடிப்பதற்கு சிரமமானதாகவும் மாறியுள்ளது. தேங்காய் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு குரங்குகளும் ஒரு காரணம் என ஒரு அமைச்சர் கூறினார். ஒரு குறிப்பிட்ட சிரேஸ்ட அமைச்சர் குரங்குகளைச் சுட வேண்டும் என்று கூடக் கூறினார்.

இருப்பினும், ஜே.வி.பியின் கடந்தகால நடவடிக்கைகள் காரணமாக விவசாயிகளிடம் இருந்த துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்தமைக்காக ஜே.வி.பியினருக்கு நன்றி கூற வேண்டும். இன்று குரங்குகளைச் சுடுவதற்கு, கிரிமினல் கும்பல்களிடம் இருப்பது போல விசாயிகளிடம் துப்பாக்கிகள் இல்லை. இந்த மாதிரி அரைகுறையாகச் சிந்திப்பது பரவாயில்லை. பாரதூரமான விடயம் என்னவென்றால், ஒரு கிழமைக்கு முன்னர் ஏற்பட்ட நாடு தழுவிய மின்சாரத் தடைதான்.

இந்த மின்சாரத் தடைக்கு மீண்டும் ஒரு தடவை ஒரு அமைச்சர் குரங்கின் மீது பழியைப் போட்டார். இதன் காரணமாக அரசாங்கம் சர்வதேச ரீதியான நகைச்சுவைப் பொருளாகியது. இத்தகைய ஒரு சூழலில்தான் ஜனாதிபதி திசாநாயக்க தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார். வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை 6.7 வீதத்துக்குக் கீழே குறைக்க முடிந்திருந்தால் அரசாங்கத்துக்கு நற்பெயர் கிடைத்திருக்கும். பிரச்சினை என்னவென்றால் நாம் இந்த இடைவெளியை எவ்வாறு ஈடு கட்டுவது என்பதாகும். ஏற்றுமதியை அதிகரிப்பது மூலம் இதைச் சரி செய்யலாம் என ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார்.

அமெரிக்காவே எமது ஏற்றுமதிக்கான பிரதான சந்தை. எமது ஏற்றுமதியில் கால் பங்கு அமெரிக்காவுக்கானது. இன்று அமெரிக்கா தனது நட்பு நாடுகளுக்குக் கூட தடைகளை விதித்துள்ளதுடன், எண்ணற்ற வர்த்தகப் போர்களில் ஈடுபட்டிருப்பதால், அமெரிக்க சந்தை மிகவும் குழப்ப நிலையில் இருக்கிறது.

நாம் மேற்கத்தைய சந்தைகளில் தங்கியிருப்பதிலிருந்து எமது ஏற்றுமதி செயல் உபாயத்தை விடுவிக்க வேண்டும். இப்போதைய நிலையில் உலகில் சனத்தொகை கூடிய நாடுகளான இந்தியா, சீனா போன்றவற்றில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். மலேசியா,

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**